பக்கங்கள் : பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 புரட்டாதி 04 திங்கட்கிழமை (20-09-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:300

# பிரதமரை ஓரம் கட்ட ஜனாதிபதி தீர்மானம்!

## அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் அனுராவை நிறுத்துவதற்கும் முடிவு

கொழும்பு,செப்ரெம்பர்20

**கட்சியிலும் அரசிலும் தமக்கு அடுத்த நிலையில் இருக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை ஒரேயடியாக ஓரம் கட்டிவிட்டு அந்த இடத்துக்குத் தமது தம்பியார் அனுரா பண்டாரநாயக்கவை முன்னுக்குக் கொண்டுவர ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தீர்மானித்துவிட்டார்.**

**தொடர்ந்து அரசிலும் கட்சியிலும் தமது அதிகாரத்தைத் தக்க வைக்கும் மார்க்கமாக, அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தமது தரப்பின் வேட்பாளராகத் தமது தம்பியாரையே நிறுத்துவதற்கு அவர் எண்ணியுள்ளார். அதற்கு வசதியாக மஹிந்த ராஜபக்ஷவை ஓரம் கட்டும் நடவடிக்கையை அவர் இப்போதே ஆரம்பித்துவிட்டார் என விடயமறிந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.**

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் இரண்டாவது பதவிக் காலம் அடுத்த வருடம் இறுதியுடன் முடிவடைகிறது. முதல் தடவை தனது ஆறுவருடப் பதவிக்காலத்தில் ஒரு வருடம் முன்னதாக - ஐந்தாவது வருடத்தின் முடிவில் - இரண்டாவது தடவை பதவிக்கான தேர்தலை நடத்தியதைக் காட்டி உயர் நீதிமன்றத்தின் உதவியோடு - தற்போதைய ஆட்சிக் காலத்தை மேலும் ஒரு வருடம் நீடிப்பதற்கு அவருக்கு வாய்ப்புண்டு.

எப்படி என்றாலும் தற்போதைய அரசமைப்புப்படி ஆகக்கூடியது 2006ஆம் ஆண்டு இறுதியோடு நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியில் இருந்து அவர் வெளியேறித்தான் ஆகவேண்டும். அவ்வேளை புதியவர் ஒருவர் அப்பதவியை ஏற்பதும் தவிர்க்கமுடியாதது.

தற்போதைய அரசமைப்பை மாற்றுவதன் மூலம் நிறைவேற்று அதிகாரமுடைய பிரதமராகவோ அல்லது வேறு வழிகளிலோ தன்னுடைய தலைமைத்துவத்தை உறுதிப்படுத்துவதற்கு அவர் எடுத்த முயற்சிகள் பலனளிக்கா என்பது இப்போது அவருக்குத் தெளிவாகிவிட்டது.

அரசின் சாதாரண பெரும்பான்மைக்கே அல்

(14ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் பொலீஸ் அதிகாரி சுட்டுக்கொலை!

கொழும்பு,செப்.20

நீர்கொழும்பு பமுனுகம பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் டெல்ரன் ரொட்றிக்கோ நேற்றுப் பிற்பகல் சுட்டுக்கொலலப்பட்டார்.

கடமையில் இருந்த கான்ஸ்டபிள் ஒருவரே பொலீஸ் நிலையத்துக்குள் வைத்து அவரைச் சுட்டுக்கொன்றார் என்று தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பிட்ட பொலீஸ் கான்ஸ்டபிள் விடுமுறை கோரியதாகவும் இதற்கு பொலீஸ் நிலை

(14ஆம் பக்கம் பார்க்க)

### நோர்வே அனுசரணை முயற்சி

## ஜனாதிபதி புகழ்கின்றார் ஜே.வி.பி. எதிர்க்கின்றது

### கூட்டணிக்குள் குழப்பம் தொடர்கிறது

கொழும்பு,செப்.20

நோர்வேயின் சமாதானப் பிரதிநிதியான எரிக் சொல்ஹெய்ம் அவர்களைச் சந்தித்த ஜனாதிபதி, தனது சந்திப்பின் இறுதியில் நோர்வேயின் பங்களிப்பைப் புகழ்ந்து அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தார்.

எனினும், ஓரிரு வாரத்திற்கு முன்னர், ஜனாதிபதி சந்திரிகா கூட்டணியின் பிரதான அங்கத்தவர்களான ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் விமல் வீரவன்ஸ கையெழுத்திட்ட கடிதமொன்றை, சிங்கள தேசிய இயக்கம் நோர்வே பிரதமருக்கு அனுப்பிவைத்திருந்தது.

இக்கடிதத்தில், நோர்வேயின் அனுசரணையைக் கடுமையாகக் கண்டித்திருந்த ஜே.வி.பி., நோர்வே தனது சமாதான அனுசரணை முயற்சியைக் முற்றாகக் கைவிட்டு, சிறிலங்காவின் சமாதான விடயங்களிலிருந்து தன்னை முழுமை

(14ஆம் பக்கம் பார்க்க)

## பாணின் விலை தெற்கில் 3 ரூபாவால் உயர்கின்றது

கொழும்பு,செப்.20

தென்னிலங்கையில் பாணின் விலை நேற்று திடீரென அதிகரித்தது.

நேற்றுமுதல் பாணின் விலை 3 ரூபாவால் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. மாவின் விலை உயர்வே இதற்குக் காரணம் எனவும் கூறப்பட்டது.

பொருளாதார வளர்ச்சியை விரைவாக உருவாக்குவேன் எனக் கூறிய சந்திரிகா அரசு ஆட்சிக்கு வந்த நாள்முதல் பல்வேறு அவசியப் பொருள்களினதும் விலைகள் படிப்படியாக உயர்ந்து வருகின்றன.

பாணின் விலையிலும் தற்போது அதிகரிபபு ஏற்பட்டுள்ளமையானது பொதுமக்கள் மத்தியில் கடும் அதிருப்தியை தோற்றுவித்துள்ளது.

(ஐ-9)

## இரத்தினபுரியில் வெள்ள அபாயம்!

கொழும்பு,செப்.20

இரத்தினபுரி மாவட்டத்தில் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இம்மாவட்டத்தில் மழை பெய்து வருகிறது. இந்நிலை தொடருமாயின் வெள்ளம் ஏற்படலாம் என மாவட்டச் செயலாளர் திருமதி மாலினி பிரேமரத்ன தெரிவித்தார். இம்மாவட்டத்தில் அயகம, கலவான ஆகிய பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கி வருகின்றன. வீதிகள் வெள்ளத்தில் மூழ்கிவிட்டன. வாகனப் போக்குவரத்து இப்பகுதியில் தடைப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வெள்ளம் ஏற்படின் அதனை எதிர்கொள்வதற்குத் தயராக தாம் இருக்கின்றார் எனவும் மாவட்டச் செயலாளர் நம்பிக்கை தெரிவித்தார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானப் பேச்சை முன்னெடுப்பதாகக் கூறிக்கொண்டு ஆட்சிக்கு வந்த சந்திரிகா இப்போது மாறிக் கதைக்கிறார்

### புலிகளின் சமாதானச் செயலகம் குற்றச்சாட்டு

கிளிநொச்சி,செப்.20

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பதாகக் கூறி ஆட்சிக்கு வந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் தலைவி சந்திரிகா தற்போது அதற்கெதிரான கருத்தினை முன்வைத்து வருகிறார் எனத் தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகம் குற்றஞ்சாட்டியுள்ளது.

தற்போதைய சமாதான இழுபறிநிலை தொடர்பாகச் சமாதானச் செயலகம் இணையத்தளத்தில் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு ஒன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 16ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தால் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில் சமாதானப் பேச்சு முன்னெடுப்புக்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் விட்டுக்கொடுப்பில்லாமல் செயற்பட்டு வருகின்றனர் எனவும் தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதானம் தொடர்பில் ஒரு தீர்மானம் இல்லாமல் இருக்கின்றனர் எனவும் - ஜனாதிபதி நோர்வே விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்முக்குத் தெரிவித்துள்ளார் எனக் கூறப்பட்டுள்ளமை தமிழ் மக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசு ஆட்சியில்

(14ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தின் மூத்த அதிகாரிகள் பலர் ஒரேசமயத்தில் ஓய்வுபெறும் நிலைமை

### புதிய விதிமுறையால் அனுபவசாலிகள் ஒன்றாக வீட்டுக்கு!

முப்படைகளின் உயர் பதவிகளில் இருப்போருக்கு ஆகக்கூடியது இரண்டு தடவைகளுக்கு மேல் சேவை நீடிப்பு வழங்குவதில்லை என்ற அரசின் புதிய முடிவு காரணமாக இராணுவத்தில் இராணுவத் தளபதிக்கு அடுத்த நிலை வரிசையில் உள்ள ஏழு எட்டு உயர் மட்ட அதிகாரிகள் ஏறத்தாள ஒரே சமயத்தில் வட்டுக்கு அனுப்பப்படும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. முப்படையினருக்கும் பதவி நீடிப்பு வழங்குவது தொடர்பாக ஆராய்ந்து முடிவுகளை சிபாரிசு செய்வதற்காக ஆறுபேர் கொண்ட குழுவொன்றை ஜனாதிபதி குமாரதுங்க நியமித்திருந்தார்.

அமைச்சரவைச் செயலகத்தின் மேலதிகச் செயலாளர் தி.பி.அபேகீர்த்தி இந்தக் குழுவுக்கு தலைமை வகித்தார். அரச நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் பி.ஜி.கருணாரத்ன, பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் சுனில் சிறிசேன, இராணுவத்தின் பிரதிநிதியாக மேஜர் ஜெனரல் ஜெயந்த ரணவீர (தற்போது ஓய்வுபெற்றுவிட்ட இவர் பாதுகாப்பு அமைச்சின் இராணுவ இணைப்பு அதிகாரியாகப் பணிபுரிகின்றார்), கடற்படைப் பிரதிநிதியான கொமடோர் ரி.எஸ்.ஜி.சமரசிங்க, விமானப்படைப் பிரதிநிதியான ஏயர்வைஸ் மார்ஷல் ஆர்.அருந்தவநாதன் ஆகியோர் குழுவில் அங்கம்வகிததனர்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## புதிய பொலீஸ்மா அதிபராக சந்திரா பெர்னாண்டோ!

கொழும்பு,செப்.20

இலங்கையின் புதிய பொலீஸ்மா அதிபராகத் தற்போதைய பிரதிப் பொலீஸ்மா அதிபர் சந்திரா பெர்ணாண்டோ பதவியேற்கவுள்ளார் எனத் தெரிகிறது.

தற்போது பொலீஸ்மா அதிபராகப் பதவி வகிக்கும் இந்திரா டி சில்வாவின் பதவிக்காலம் இந்த மாதத்துடன் முடிவு பெறவிருப்பதால் இந்த புதிய நியமனம் வழங்கப்படவுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பிரதிப் பொலீஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோவின் பெயரைப் பொலீஸ்மா அதிபர் பதவிக்கு சிபார்சு

(14ஆம் பக்கம் பார்க்க)

## பொலநறுவை சிவன் கோயிலுக்கு பிரதமர் அடிக்கல்

பொலநறுவை,செப்.20

பொலநறுவையில் உள்ள சிவன்கோயில் புனர்நிர்மாணம் செய்யப்படவுள்ளது. இதற்கான அடிக்கல்லை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் நட்டார்.

இந்தச் சிவன் கோயில் ஒன்பதாம் நூற்றாண்டிற்கும் பத்தாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் கட்டப்பட்டது. பொலநறுவைக் காலத்தில் ஆட்சி செய்த மன்னர்களால் பெரிதும் போற்றிக் காக்கப்பட்டு வந்தது.

அடிக்கல் நாட்டு விழாவில், அமைச்சரும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளருமான மைத்திரிபால சிறிசேனவும், பிரதி அமைச்சர் கம்லத்தும் பங்கேற்றனர்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# சுயநிர்ணய உரிமையை வென்றெடுக்க தமிழர்கள் இடையறாது போராடவேண்டும்

## மட்டு. நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன்

வடக்கு - கிழக்குத் தமிழரின் பிரச்சினையை இதயசுத்தியுடன் தீர்க்கக்கூடிய எந்தத்திட்டமும் ஆளும் சுதந்திரக் கூட்டமைப்பு அரசிடம் இல்லை. எனவே, தமிழர்கள் அனைவரும் ஒன்றிணைந்து சுயநிர்ணய உரிமையை வென்றெடுக்க இடையறாது போராடவேண்டும்.

- இவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

பட்டிருப்பு கல்வி வலயத்திலுள்ள அம்பிலாந்துறை கலைமகள் வித்தியாலயத்தின் புதிய கட்டடத் தொகுதிக்கு அடிக்கல்நடும் விழா அண்மையில் நடைபெற்றது. இதில் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். நிகழ்வில் அவர் மேலும் உரையாற்றுகையில் கூறியதாவது:-

தற்போதைய அரசின் ஓர் அங்கமாக இருக்கும் ஜே.வி.பி., இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைக்கு எதிராகக் குரல் கொடுத்து வருகின்றது. அதேசமயம் யுத்தநிறுத்தம் எவ்வளவு காலம் நீடிக்கும் என்ற சந்தேகமும் ஏற்பட்டுள்ளது.

எனவே, தமிழ்மக்கள் தமது உரிமைகளை வென்றெடுக்க வேண்டுமானால் ஒன்றிணைந்து, ஒருமித்துக் குரல் கொடுக்கவேண்டிய காலம் நெருங்கிவிட்டது - எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஸ்ரீலங்கா ரெலிக்கொம்மின் இணைய அறிவூட்டல்

யாழ்ப்பாணம்,செப்.20

ஸ்ரீலங்கா ரெலிக்கொம், யாழ்ப்பாணப் பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு இணையம் தொடர்பான அறிவூட்டல் நிகழ்வுகளை நடத்தவுள்ளது.

இந்நிகழ்வு இன்றுமுதல் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை யாழ்ப்பாணப் பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மட்டங்களில் நடைபெறவுள்ளது. இணைய வலைப்பின்னல் மற்றும் இலத்திரனியல் அஞ்சல்முறை தொடர்பாக கருத்தரங்குகள் மற்றும் பிற அறிவூட்டல் நிகழ்வுகள் மூலம் மாணவர்களுக்கு விளக்கமளிக்கப்படவுள்ளது. (9)

# ஓமந்தையில் கைதான காவல்துறை உறுப்பினர்கள் கண்காணிப்புக்குழுத் தலையீட்டால் பின்னர் விடுவிப்பு

கொழும்பு,செப்.20

ஓமந்தை இராணுவச் சோதனைச் சாவடியில் கைதுசெய்யப்பட்டுப் பின்னர் வவுனியா பொலீஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்த தமிழீழ காவல்துறை உறுப்பினர்கள் மூவர் கண்காணிப்புக் குழுவினரின் தலையீட்டையடுத்து விடுவிக்கப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் காலை 8.45 மணியளவில் மூதூர் செல்வதற்காக ஓமந்தை இராணுவச் சோதனைச்சாவடியூடாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் பிரவேசித்த தமிழீழக் காவல்துறையைச் சேர்ந்த மூவர் கைதுசெய்யப்பட்டனர். மூதூரைச் சேர்ந்த சின்னக்குட்டி விஜயராசா (வயது 24), காளிதாசன் ரவீந்திரன் (வயது 28), தர்மலிங்கம் தயாபரன் (வயது21) ஆகியோரே கைதுசெய்யப்பட்டனர். சம்பந்தப்பட்டவர்களின் பயணப் பைகளில் தமிழீழக் காவல்துறையினர் அணியும் சீருடைகள் மற்றும் புலிச்சின்னங்கள் போன்றவை இருந்தமையே அவர்கள் கைதுசெய்யப்பட்டமைக்குக் காரணம் என இராணுவத்தினர் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட இவர்கள் மூவரும் பின்னர் வவுனியா பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

தமது காவல்துறையினர் கைதுசெய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் விடயம் குறித்து போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினருக்கு விடுதலைப் புலிகள் முறைப்பாடொன்றைச் செய்தனர்.

இந்த விடயத்தில் தலையிட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் பொலீஸாரிடம் பேசி தமிழீழக் காவல்துறையினரை விடுவித்தனர்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் விடுதலைப் புலிகளின் சீருடைகள் எடுத்துவருவது மற்றும் சீருடையுடன் பிரவேசிப்பது போன்ற செயல்கள் போர்நிறுத்தத்தை மீறுபவை என இராணுவத் தலைமையக வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

(க)

## தளபதி ரமேஷ் வன்னி திரும்பினார்

கொழும்பு,செப்.20

விடுதலைப் புலிகளின் கிழக்குப் பிராந்திய சிறப்புத் தளபதியாக பணியாற்றி வந்த ரமேஷ் கடந்த சனியன்று தரைவழியாக மட்டக்களப்பில் இருந்து வன்னி திரும்பினார்.

தற்போது மட்டக்களப்பில் தங்கியுள்ள புலிகளின் சிரேஷ்ட தளபதிகளுள் ஒருவரான பானு, கிழக்குப் பிராந்திய விசேட தளபதியின் பொறுப்பைக் கவனிப்பார் என ஒரு தகவல் தெரிவித்தது. (க)

# அரசின் ஸ்திரத்தன்மை பேணவே எனது அமைச்சை விட்டுக்கொடுத்தேன்

## முன்னாள் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர்

கொழும்பு,செப்.20

"தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சை விட்டுக்கொடுத்தது அரசின் ஸ்திரத்தன்மையை தக்கவைப்பதற்கே"

- இப்படித் தெரிவித்திருக்கிறார் சிறு தோட்டத்துறை கிராமிய மனிதவள அமைச்சர் சி.பி.ரத்நாயக்க.

தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு தன்வசமிருந்து பறிக்கப்பட்டது பற்றி ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இப்படி அவர் தெரிவித்தார்.

அவர் இதுபற்றி மேலும் கருத்துத் தெரிவித்ததாவது:-

எனது அமைச்சை விட்டுக் கொடுத்ததன் மூலம் ஒரு ஸ்திரமான அரசை நிறுவுவதற்கு நான் காரணமாக இருந்தேன் என்பது குறித்து பெருமைப்படுகிறேன். நான் என்றுமே யாருக்கும் கீழ்ப்படிந்து நடப்பவன் அல்லன்.

மலையகப் பகுதியில் அந்நியோன்யத்தையும், ஒற்றுமையையும் ஏற்படுத்துவதற்குப் பாடுபட்டேன். எனது சேவையின் பிரதிபலன் கடந்த மாகாண சபைத் தேர்தலின்போது மத்திய மாகாணத்தில் உறுதிப்படுத்தப்பட்டது. எனது அமைச்சின் ஊடாக பல சேவைகளைச் செய்திருக்கிறேன். நான் நோய்வாய்ப்பட்டு ஓய்வெடுத்துக் கொண்டிருந்தபோது எந்தவித முன்னறிவிப்பும் இன்றி இ.தொ.கா. உறுப்பினர்கள் எனது அமைச்சுக்குச் சென்று எமது இருக்கைகளில் அமர்ந்துள்ளனர். இந்த அரசியல் நாகரிகம் பற்றி நான் எதுவும் கூற விரும்பவில்லை.

எனது அமைச்சை நான் விட்டுக்கொடுத்ததன் மூலம் அல்லாடிக்கொண்டிருந்த அரசுக்கு பெரும்பான்மை கிடைத்துள்ளது. இது எனக்குப் பெருமையே.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பற்றி நான் எதுவும் கூறவிரும்பவில்லை. அக்கட்சி எப்போதுமே ஆளும் தரப்புக்கு - அது எக்கட்சியாக இருந்தாலும் - ஆதரவு கொடுத்துவந்துள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் வெற்றி பெற்ற உறுப்பினர்கள் மூன்று பேர் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாக இருந்து வந்துள்ளனர். இம்முறை நான் மட்டுமே இருந்தேன். எனினும் நான் ஜனாதிபதியிடம் எதையும் கேட்டுப் பெறவில்லை என்பதே உண்மை.

எது எப்படியாயினும் நுவரெலியா மாவட்ட மக்கள் மொழிபேதமின்றி என்மேல் நம்பிக்கை வைத்துள்ளனர். தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் மூலம் யாரும் இதுவரை செய்யாத சேவையை குறுகிய காலத்தில் நான் செய்துள்ளேன் என்பது மலையக மக்களுக்கு நன்கு தெரியும் - இப்படி தெரிவித்துள்ளார் அவர்.

(க)

## கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் நியமனம்


சங்கானை,செப்.20

சங்கானை மற்றும் தெல்லிப்பழைக் கல்விக் கோட்டங்களுக்குப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் இன்று தமது கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளனர்.

தெல்லிப்பழை கல்விக் கோட்டப் பணிப்பாளராக சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய அதிபர் ச.கைலாயநாதனும், சங்கானை கல்விக் கோட்டப் பணிப்பாளராக பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி அதிபர் என்.சண்முகசுந்தரமும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சங்கானை கல்விக்கோட்டப் பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற சி.செல்லையா மற்றும் தெல்லிப்பழை கல்விக் கோட்டப் பணிப்பாளராக இருந்து வலிகாமம் வலயத்திற்கு மாற்றலாகிச் சென்ற கா.சந்திரபாலன் ஆகிய இருவரதும் இடங்களுக்கே இவர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

(ப-29-203)




இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உள்ளக இடம்பெயர்ந்தோர் செயற்றிட்டப் பிரிவின் யாழ். அலுவலகத்தினால் நடத்தப்பட்ட சிறுவர்தின நிகழ்வு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்வில் யாழ். நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா உரையாற்றுவதையும் அருகில் மனித உரிமை ஆணைக்குழுவின் விசாரணை அதிகாரி பெரோஸ், உள்ளக இடம்பெயர்ந்தோர் செயற்றிட்டப் பிரிவின் யாழ். அலுவலர் வி.வேழினி, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். கிளை இணைப்பாளர் றெகான் சந்திரசேகர ஆகியோர்அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்ட சிறுவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# பொது இடங்களில் மதுபானம் அருந்துபவர்கள் மீது நடவடிக்கை!

கொழும்பு,செப்.20

பொது இடங்களில் மதுபானம் அருந்துபவர்களை உடனடியாகக் கைதுசெய்யுமாறு பொலீஸ்மா அதிபர் இந்திரா டி சில்வா உத்தரவிட்டுள்ளார்.

காலிமுகத்திடல், தேசிய பூங்காக்கள், மக்கள் பெருமளவில் கூடும் கடற்கரைப் பிரதேசங்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள், வழிபாட்டுத் தலங்கள் போன்ற இடங்கள் இவ்விடயத்தில் பிரதானமாகக் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளன.

பொதுமக்கள் அதிகமாகக் கூடும் இடங்களில் குழுக்களாக அமர்ந்துகொண்டு மதுபானம் அருந்துபவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதோடு, இதனால் பொதுமக்களுக்கு ஏற்பட்டுவரும் அசௌகரியங்கள் குறித்து முறைப்பாடுகளும் பெருமளவில் கிடைத்துள்ளனவாம். இதை அடுத்தே பொலீஸ்மா அதிபர் இந்த உத்தரவை வழங்கியுள்ளார்.

இது தொடர்பாக நாட்டில் உள்ள சகல பொலீஸ நிலையங்களுக்கும் பொலீஸ்மா அதிபரினால் கண்டிப்பான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதன்படி பொது இடங்களில் மதுபானம் அருந்துபவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கவும் வழக்குத் தொடரவும் பொலீஸ் தலைமையகம் முடிவு செய்துள்ளது.

# குடும்பஸ்தர் கொலையால் பொரளையில் பதற்ற நிலைமை!

## பாதுகாப்புக் கடமையில் பொலீஸார்

கொழும்பு,செப்.20

பொரளைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டமையை அடுத்து அப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவுகிறது.

கடந்த 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பு ஹோட்டன் பிளேஸில் திபுல அல்லது ஜிபோய் என்றழைக்கப்படும் விஜேந்திர பீட்டர்ஸ் என்பவர் இனந்தெரியாதவர்களால் சுடப்பட்டார். அவரின் சிறிய தந்தையான போனி நீல் என்றழைக்கப்படும் பிச்சை முனுசாமி தியாகராஜா (வயது 50) என்பவரே நேற்றுமுன்தினம் இரவு சுட்டுக்கொல்லப்பட்டார். இவரது கொலையை அடுத்து அப்பகுதியில் உள்ள இரு குழுக்கள் இடையில் முறுகல் நிலை தோன்றி உள்ளது.

பொரளை மகஸின் தோட்டம் என்ற பகுதியில் வசிப்பவர்களுக்கும், சிங்க துபத்த என்ற பகுதியில் வசிப்பவர்களுக்குமிடையிலேயே பதற்றம் ஏற்பட்டுள்ளது.

நீண்டகாலமாக இந்த இரு தரப்பினருக்கும் இடையே இருந்து வரும் முறுகல் நிலை மேற்படி இருவரும் அடுத்தடுத்த வாரங்களில் சுட்டுக் கொல்லப்பட்டதையடுத்து மேலும் உக்கிரமடைந்துள்ளது.

இருவரும் எதிரெதிர் கோஷ்டிகளைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. ஜிபோயின் கொலைக்குப் பழிவாங்கவே தியாகராஜா சுடப்பட்டார் என்று பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.

இந்த இருதரப்பினருக்கும் இடையிலான தொடரும் பகைமையினால் இதுவரை 23 பேர் சுட்டும், வெட்டியும் கொல்லப்பட்டுள்ளனர் என பொரளைப் பொலீஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம்முதல் முறுகல் நிலை மேலும் அதிகரித்திருப்பதால் இரு பகுதியினருக்கும் இடையில் எந்நேரமும் மோதல் வெடிக்கலாம் என்ற அச்சம் நிலவுகிறது. அப்பகுதியில் பொலீஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

உதயன்

## பேரினவாதம்தான் பின்னடைவுக்குக் காரணம்

இன்று இலங்கைத் தீவின் சாதாரண மக்களைப் பாதிக்கும் மிக முக்கிய விவகாரங்கள் இரண்டு.

ஒன்று - இனப்பிரச்சினை. தீர்வின்றி இழுபடும் இனப்பிணக்குக்கு இணக்கத் தீர்வு காணமுடியாது இடைஞ்சல்படுகிறது நாடு.

மற்றது - விஷம் போல் கிடுகிடுவென ஏறும் விலைவாசி உயர்வு.

முன்னெப்போதும் இல்லாதவகையில், எகிறிவரும் விலைவாசியை எதிர்கொள்ள முடியாமல் முழுநாட்டு மக்களுமே மலைத்துப்போய் நிற்கின்றார்கள்.

தாங்கள் வாக்குப் போட்டுத் தேர்ந்தெடுத்த அரசை நோவதா அல்லது தங்கள் தலையெழுத்தையே நொந்துகொள்வதா என்று தெரியாத குழப்பநிலையில் தென்பகுதி மக்கள் தடுமாறுகின்றனர்.

எரிபொருள் விலை உயர்வு, காஸ் விலை அதிகரிப்பு, மின்கட்டணம் பாய்ச்சல் என்று தினசரி வரும் செய்திகள் மக்களை - அதுவும் சாதாரண இடைத்தர வர்க்க மக்களை - பெரும் இக்கட்டுக்குள் வீழ்த்தியிருக்கின்றது.

எரிபொருள் கட்டண உயர்வு இந்த மட்டத்தில் நிற்காது, மேலும் அதிகரிக்கும் என்று இப்போது கோடி காட்டியிருப்பவர் வேறு யாருமல்லர். நாட்டின் நிதியமைச்சரே அதை அறிவித்துவிட்டார்.

விலைவாசி மேலும் எகிறப்போகின்றது என்பதற்கான கட்டியம் கூறலாக இந்த அறிவிப்பை எடுக்கலாம்.

ஏற்கனவே, அரிசி, பருப்பு, சீனி, தேங்காய், பாண், தேங்காய் எண்ணெய், பால்மா வகைகள் என அத்தியாவசியப் பொருள்கள் அனைத்தினதும் விலைகள் மளமளவென்று உயர்ந்துவிட்டன. மீண்டும் எரிபொருள் விலை, மின்சாரக் கட்டணம் போன்றவை அதிகரிக்கும்போது இந்த அத்தியாவசியப் பொருள்களின் விலையும் அடுத்த சுற்று அதிகரிக்கும் என்பது நிச்சயம்.

இந்த அதிகரிப்புப் போதாது என்று இறக்குமதியாகும் வெங்காயத்துக்குக் கிலோ ஒன்றுக்கு பத்து ரூபா வரி விதிக்க அரசு ஆலோசித்திருப்பதாகத் தகவல். அது நடைமுறைக்கு வந்தால் இப்போது - ஏற்கனவே - அதிகரித்திருக்கும் வெங்காய விலை மேலும் கிலோவுக்கு பதினைந்து ரூபா வரை உயரும்.

ஆட்சிக்கு வந்தால் அரச ஊழியர்களின் சம்பளத்தைக் கணிசமாக உயர்த்துவோம் என்று வாக்குறுதிகளை அள்ளிவீசி ஆட்சியைப் பிடித்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, இன்று தனது திறனற்ற நிர்வாக முறைமைகளினால் நாட்டின் பொருளாதாரத்தை அதலபாதாளத்தில் வீழ்த்தி - பொருள்களின் விலைகளை எக்கச்சக்கமாக உயர்த்தி - பெரும்நிதிச் சுமையை மக்கள் மீது சுமத்தி - அவர்களின் வயிற்றில் அடித்திருக்கின்றது.

ஒருபுறம், இனப்பிரச்சினையைச் சிக்கலாக்கியுள்ள இந்த அரசுக்கூட்டு, அதைத் தென்னிலங்கை மக்களிடம் சமாளிப்பதற்காகப் பேரினவாதப் பூதத்தை முன்னே தூக்கிக் காட்டுகின்றது.

மறுபுறம், பொருளாதாரக் கொள்கைகள், நடைமுறைகளில் தவறிழைத்து, அதனால் நாட்டின் பொருளாதார வளத்தையே மோசமாக்கியுள்ள இந்த அரசு, அதைச் சமாளிப்பதற்குச் சர்வதேச சந்தையில் எரிபொருள் மற்றும் உற்பத்திப் பொருள்களின் விலை உயர்வைக் காரணங்காட்டிச் சமாளிக்க முயல்கின்றது.

இலங்கையைவிடப் பலமடங்கு பெரிதான இந்தியா கூட, சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயின் விலை கூடியபோதும் அந்தவிலை அதிகரிப்பால் ஏற்பட்ட சுமையை இன்னும் தனது மக்கள் மீது சுமத்தாமல் சமாளித்து வருகின்றது.

ஆனால், இலங்கையிலோ நிலைமை தலைகீழ்.

இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணும் சமாதான முயற்சிகளை ஆக்கபூர்வமான திசையில் இந்த அரசு நகர்த்தியிருக்குமானால், பெருமளவு சர்வதேச நிதி உதவிகள் இந்த நாட்டுக்குள் வந்து குவிந்திருக்கும் - சொரிந்திருக்கும் - என்பது திண்ணம். அதனால் விலைவாசி உயர்வு கட்டுப்பட்டிருக்கும் என்பது மட்டுமல்ல, நாடும் பொருளாதாரத்தை வளம்படுத்தி முன்னேற வாய்ப்பும் கிடைத்திருக்கும்.

ஆனால், தென்னிலங்கை அரசியல் முறைமை சிங்களப் பேரினவாத சக்திக்குள் மூழ்கியதால் எல்லாம் அடியோடு போய்விட்டது; அடிப்பட்டுப்போய் விட்டது.

அமைதி முயற்சிகள் தேங்கிவிட்டன. அதனால் சர்வதேச நிதி உதவிகளும் 'அவுட'!

இப்போது அடுத்த வேளைக்கே தாளம் போட வேண்டிய நிலையில் அரசும், நாடும், மக்களும்.

இவ்வளவுக்கும் காரணம் பேரினவாதம்தான்; அந்தப் பேரினவாதிகள் போடும் தாளத்துக்கு ஆட வேண்டிய நிலையில் அரசு இருப்பதுதான்.

எனவே, பேரினவாதத்தின் பிடியிலிருந்து நாடு மீளும் வரை அமைதி வாழ்க்கைக்கு மட்டுமல்ல, மனநிறைவான வாழக்கைக்கும் கூட இங்கு இடம்கிடையாது. இதைத் தென்னிலங்கை எப்போது உணரப்போகின்றது?

# யாழ். மருத்துவமனையின் தரத்தை தேசிய மட்டத்துக்கு உயர்த்த வேண்டும்

### அரச மருத்துவ சேவையாளர் சங்கம் வலியுறுத்து

கொழும்பு, செப்.20

தேசிய மட்டத்திலான நான்கு வைத்தியசாலைகள் நிறுவப்படவேண்டும் எனறு அரச மருத்துவ சேவையாளர் சங்கம சுகாதார அமைச்சுக்கு ஆலோசனை தெரிவித்துள்ளது. அவைகளில் ஒன்று யாழ்ப்பாணத்தில் அமையவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்துவரும் ஐந்து ஆண்டுகளில் சுகாதாரச்சேவையை எவ்வாறு அபிவிருத்தி செய்யலாம் என்பது குறித்த விரிவான ஆலோசனைகள் அடங்கிய ஆவணம் ஒன்றை மேற்படி சங்கம் சுகாதார அமைச்சிடம் கையளித்துள்ளது.

ஆலோசனை வழக்குநர் பிரிவொன்றை நிறுவுவது உட்பட மருத்துவமனையின் தரங்களை உயர்த்துவது தொடர்பான திட்டமொன்றை சங்கம் வரைந்துள்ளது.

இத்திட்டம் கடந்தவாரம் சுகாதார அமைச்சர் சிறிபால டி சில்வாவிடம் கையளிக்கப்பட்டதாகவும், பத்து நாள்களுக்குள அதற்குப் பதிலளிப்பதாக அமைச்சர் தெரிவித்திருப்பதாகவும் சங்கத்தின் செயலாளர் டாக்டர் அநுருத்த பாதெனிய தெரிவத்தார்.

மருத்துவமனைகள் மக்கள் தேவைகளையும் இதர தேவையான முக்கிய அம்சங்களையும் கருத்திற்கொள்ளாமல் நினைத்தபடி தரம் உயர்ததப்படுகின்றன. நாம் சமர்ப்பித்துள்ள ஆவணம் கண்டி, கரபிட்டிய, யாழ்ப்பாணம் ஆகிய மருத்துவமனைகளைத் தரம் உயர்த்துவதோடு தேசிய மருத்துவமனையின் தரத்துக்கு இணையாக நான்கு தேசிய தரததிலான மருத்துவமனைகளை நிறுவ வேண்டுமென ஆலோசனை கூறுகிறது என்று டாக்டர் பாதெனிய கூறினார்.

தேசிய மருத்துவமனைகள் இல்லாத மாகாணங்களில் தேசிய மருத்துவமனைகள் அமைக்கப்பட வேண்டும். ஏனையவை மாவட்ட மட்டத்திலும் ஆதார மருத்துவமனைகளாகவும் நடத்தப்பட வேண்டும என்றும் எமது ஆவணம் ஆலோசனை கூறுகிறது என்றார் அவர். (ப)

## அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான செயலமர்வு

யாழ்ப்பாணம்,செப்.20

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் இந்து அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்காக நடத்தும் செயலமர்வு ஒன்று நான்கு பிரதேச செயலர் பிரிவுகளை உள்ளடக்கி எதிர்வரும் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 5.30வரை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தெல்லிப்பழை, உடுவில், சங்கானை, சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட அறநெறிப் பாடசாலைகளின் ஆசிரியர்கள் இதில் கலநது கொள்வர்.

இந்தச் செயலமர்வில் ஆசியுரையினை இளைப்பாறிய அதிபர் ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம் நிகழ்த்துவார். வாழ்த்துரையினை இராமநாதன் கல்லூரியின் அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் நிகழ்த்துவார் 'மெய்கண்ட சாஸ்திரங்களும் சைவசித்தாந்தமும்' என்னும் தலைப்பில் இளைப்பாறிய அதிபர் சைவபுலவர் சு.செல்லத்துரையும் 'சமய குரவர்களும் திருமுறைகளும்' என்னும் தலைப்பில் சிவத்தமிழ் விததகர் சிவ.மகாலிங்கமும் உரை நிகழத்துவார்கள்.

தொடர்ந்து புராணபடனப் பயிற்சியினை பண்டிதர் வ.பேரின்பநாயகமும் பு,மாலை கட்டுதல், கோலம்போடுதல் பயிறசியை சைவப்புலவர் கந்த சத்தியதாசனும் நிகழ்த்துவர்.

(எ-6)

# தமிழீழக் கல்விக்கழகம் நடத்தும் பொது அறிவுப் போட்டி நாளை

யாழ்ப்பாணம்,செப்.20

தியாகி திலீபனின் 17ஆம் ஆண்டு நினைவையொட்டி யாழ்.மாவட்ட தமிழீழக கல்விக்கழகம் யாழ்.மாவட்டத்திலுள்ள தொிவுசெய்த 5 வலயங்களிலும் மேற்பிரிவு மாணவர்களுக்கான பொது அறிவுப் போட்டிகளை நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2மணிக்கு நடத்தவுள்ளது.

முன்னர் அறிவிக்கப்பட்டபடி பாடசாலை மாணவர்களிடையேயான கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு ஆகியவற்றுக்கான கட்டுரை, கவிதைப் போட்டிகள் கல்வி வலயங்களில் அறிவிக்கப்பட்ட திகதிகளில் குறித்த வலயங்களில் குறிப்பிட்ட பாடசாலைகளில் நடைபெறும்.

சகல போட்டிகளிலும் வலய மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் எதிர்வரும் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தியாகி திலீபனின் இறுதிநாள் நிகழ்வு நடைபெறும் இடங்களில் வைத்து வழங்கப்படவுள்ளன.

வலய மட்டத்தில் நிகழ்வு நடைபெறவுள்ள இடங்கள் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் - தமிழீழக் கல்விக் கழகம் அறிவித்துள்ளது. (எ-204)




யாழ்.றோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில் 'உதயன்' கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற விசேட விருந்தினர் உரை நிகழ்வில் பாஷையூர் பங்குத்தந்தை வண. இரா.ஸ்ரலின் அடிகள் உரையாற்றும்போது எடுக்கப்பட்ட படம்.

# அதிகாரபூர்வமாகத் தமிழ் செம்மொழியாக அறிவிப்பு

சென்னை,செப்.20

தமிழ்மொழியைச் செம்மொழியென இந்திய அரசு அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

தமிழ்மொழியைச் செம்மொழியாக அறிவிப்பதற்கான அறிக்கையை இந்திய மத்திய அரசின் அமைச்சரவை பிரதமர் மன்மோகன்சிங் தலைமையில் கூடி ஆராய்ந்தபின் அதை ஏற்றுக்கொள்வதென்றும் - தமிழைச் செம்மொழியாக அறிவிப்பதென்றும் தீர்மானித்தது.

அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் இது பற்றிப் பத்திரிகையாளர்களுக்கு அறிவித்த அமைச்சரவைப் பேச்சாளர்:-

செம்மொழியாக அறிவிக்கப்படுவதற்கான சகல தகுதிகளும் தமிழ்மொழிக்குண்டு என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்று கூறினார்.

தமிழ்மொழி செம்மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டதையடுத்து புதுடில்லியிலுள்ள தமிழ்நாட்டு அமைச்சர்கள் அனைவரும் பிரதமர் மன்மோகன் சிங்கையும் காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காநதியையும் சந்தித்துத் தமது நன்றியைத் தெரிவித்துக்கொண்டனர்.

இது குறித்துப் பத்திரிகையாளர்களிடம் கருத்துத் தெரிவித்த இந்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம்:-

' இந்தியாவிலுள்ள ஆறரைக்கோடி தமிழ்மக்கள் மட்டுமன்றி, உலகம் முழுவதிலும் உள்ள தமிழர்கள் தமிழ் செம்மொழியாக அறிவிக்கப்பட்டிருப்பது குறித்து மகிழ்ச்சியும் பெருமையும் அடைவார்கள் என்று கூறினார்.

தி.மு.கழகத் தலைவர் மு.கருணாநிதியும் இந்தியப் பிரதமருக்கும் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்திக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

தமிழ் செம்மொழியாக அறிவிக்கப்பட்டதையடுத்து இந்தியாவிலுள்ள சகல பல்கலைக்கழகங்களிலும் தமிழ்மொழி ஆய்வுக்கென பீடங்கள் நிறுவப்படும் என்று அறிஞர்கள் தெரிவிக்கின்றனர். (ப)

# கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் ஆசிரியர்களுக்கு ஆக்கத்திறன் போட்டிகள்

தாவடி, செப்.20

உலக ஆசிரியர் நாளையொட்டி தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை, தமிழ் வளர்ச்சிக் கழகத்துடன் இணைந்து வடக்கு - கிழக்கு, மலையக ஆசிரியர்களுக்கிடையே தமிழ்மொழி, எழுத்தாக்கத்திறன் போடடியை இந்த ஆண்டும் நடத்தவுள்ளது.

தமிழ் மொழிமூல ஆசிரியர்களின் தமிழ்மொழி எழுத்தாக்கத் திறனை மேம்படுத்தல், தமிழ்மொழி எழுத்தாக்கத் திறனை மேம்படுத்துவதற்கான ஊக்குதலை வழங்குதல், தூயதமிழ் பயன்பாட்டு அறிவை மேம்படுத்தல் என்பனவற்றை நோக்கமாகக் கொண்டே இப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

போட்டி ஒழுங்குகளை வலயக் கல்விப பணிப்பாளர்களே மேற்கொள்வார்கள். தொண்டராசிரியர்களும் போட்டியில் பங்கு கொள்ளமுடியும். ஆனால், அதிபர்கள், சேவைக்கால ஆலோசகர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் போன்றோர் பங்குகொள்ளமுடியாது.

ஆகக்கூடிய புள்ளிகளைப்பெறும் ஐந்து ஆசிரியர்களுக்கு வெற்றிப் பதக்கங்களும் 5 ஆயிரம் ரூபா பணப் பரிசும் சான்றிதழும் ஆசிரியர் தினத்தன்று வழங்கிக் கௌரவிக்கபபடும்.

வலயங்கள்தோறும் கூடுதலான புள்ளிகளைப்பெறும் 3 ஆசிரியர்களுக்கு ஆயிரம் ரூபா பணப்பரிசும் சான்றிதழும் வழங்கப்படும்.

பெயர், பாடசாலையின் பெயர், கோடடம், வலயம், கையொப்பம், அதிபர் ஒப்பம் என்பவற்றுடன் விண்ணப்பங்களை வலயக் கல்விப் பணிப்பாளர் ஊடாகத் தமக்கு அனுப்பிவைக்குமாறு தமிழர் கல்விமேம்பாட்டுப் பேரவையின் செயலாளர் கேட்டுள்ளார்.

(4-149)

### நாளை

புரட்டாதி 5
செவ்வாய்க்கிழமை
(21.09.2004)
திதி : ஸப்தமி
முற்பகல் 10.37
நட்சத்திரம் : கேட்டை
பிற்பகல் 1.37
சுபநேரம்: 10.32 - 12.02
ராகுகாலம்: 3.02 - 4.32
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

நிலவு சுடுவதுமில்லை; இறைவன் வெறுப்பதுமில்லை.

# கண்ணீர் அஞ்சலி



எமது சங்க உப தலைவர்

**விசுவலிங்கம் குலரத்தினம் J.P.**

அவர்கள் 17.09.2004 வெள்ளிக்கிழமை காலமான செய்தியை அறிந்து அதிர்ச்சியும் கவலையும் அடைந்தோம். அன்னாரின் பிரிவினால் துயரடைந்திருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதுடன், அன்னாரின் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம். பணிப்பாளர்களும்,
மூளாய். (36663) (24-16-46-43) பணியாளர்களும்

# கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபையின் முன்னாள் பணிப்பாளர் சி.குமரவேல் அவர்களின் பாரியாரும் சுன்னாகம் ப.நோ.கூ. சங்கப் பொதுமுகாமையாளருமாகிய

**திருமதி திலகவதி குமரவேல்**

அவர்கள் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயருறுவதுடன், அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன். அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
(சி-37717) (24-16-46-43) யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை.

# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

## உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 3788614 இலிருந்து 3805604 வரை

சீட்டிழுப்பு இல. 1540
திகதி 18.09.2004

வெற்றி எண்கள்
**02 08 26 32 48**

போனஸ் எண் **25**

ஜக்பொட் பரிசு ரூபா.15,00,000/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்த பரிசுத்தொகை |
|---|---|---|---|
| 5 | - | 15,00,000/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | - | 1,00,000/- | - |
| 4 | 111 | 10,000/- | 11,10,000/- |
| 3 | 5,291 | 500/- | 26,45,500/- |
| 2 | 88,587 | 20/- | 17,71,740/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 02ம் எண் (போனஸ் எண் தவிர்ந்து) | 1,07,944 | 10/- | 10,79,440/- |

இந்த புதன்கிழமை ஜக்பொட் வெல்லப்பட்ட மொத்த தொகை ரூ. 71,06,680/-

**Rs. 23,38,150/-**

தொடர் இல. 2856465 க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுக்கள் 2004 செப்டம்பர் 22 ஆம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33,சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

சனிக்கிழமை அதிர்ஷ்டச் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் சுமார் 1,00,000/- பெறுமதியான தங்க நகை, தையல் இயந்திரம் மற்றும் சைக்கிளை வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

3799405-6-58
3801452-7-59
3789063-9-78
3799526-6-74
3804593-7-40

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

## உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 613 | டிக்கட்டின் நிறம் - சிவப்பு | |
| திகதி | 17-09-2004 | செல்லுபடியாகும் தொடர் இல. 5912549-5928207 | |

லக்கினம் நீலம்

வெற்றி இலக்கங்கள்
**28 33 41 47**

ஜக்பொட் பரிசு ரூபா.10,00,000/- வெல்லப்படவில்லை

இந்த செவ்வாய்க்கிழமை ஜக்பொட் ரூபா. 17,77,600/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 3,48,199 | 10/- | 34,81,990/- |
| 2.இலக்கங்கள் | 32,001 | 20/- | 6,40,020/- |
| 1.இல + லக்கினம் | 31,699 | 30/- | 9,50,970/- |
| 2.இல + லக்கினம் | 2,908 | 100/- | 2,90,800/- |
| 3.இலக்கங்கள் | 853 | 500/- | 4,26,500/- |
| 3.இல + லக்கினம் | 74 | 5,000/- | 3,70,000/- |
| 4.இலக்கங்கள் | 04 | 1,00,000/- | 4,00,000/- |
| 4.இல + லக்கினம் | - | 10,00,000/- | - |
| மொத்தம் | 4,15,743 | - | 76,90,530/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 76,90,530/-

தொடர் இல. 4953768 க்கு மேற்பட்ட நீலம் நிற டிக்கட்டுக்கள் 2004 செப்டம்பர் 21ம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

5918636-7-49
5923774-9-63
5916054-0-53
5920491-9-72
5914474-0-61

## மிதிவெடியில் சிக்கி பசுமாடு பலி

தென்மராட்சி,செப்.20

மிதிவெடியில் சிக்கிப் பசுமாடு பலியான சம்பவம் அண்மையில் சாவகச்சேரி முத்துமாரி அம்பாள் ஆலயத்திற்கு அருகில் இடம்பெற்றது.

அப்பகுதியில் மேய்ச்சலுக்கு விடப்பட்ட போது இச்சம்பவம் இடம்பெற்றது.

15 ஆயிரம் ரூபா பெறுமதியான இந்தப் பசுமாடு இரண்டு மாதங்களுக்கு முன்னர் கன்று ஈன்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சிவன்கோயிலடியைச் சேர்ந்த மனோகரன் யோகேஸ்வரி என்பவருக்குச் சொந்தமான பசுமாடே பலியானதாகும். (4-117)

## பாலம் அமைக்குமாறு கோரிக்கை

வரணி வடக்கு சிமிழ் அம்மன் கோவில் பகுதியில் உள்ள வாய்க்கால் ஒன்று போக்குவரத்துப்பாதையின் ஊடாகச் செல்வதனால் மக்கள் போக்குவரத்தில் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

இப்பகுதியில் பாலம் ஒன்றை நிறுவித் தரும்படி இப்பகுதி மக்கள் மகஜர் ஒன்றின் மூலம் தென்மராட்சிப் பிரதேச செயலரைக் கேட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு இவ்வாய்க்கால் உலக உணவுத் திட்டத்தின் கீழ் கமத்தொழில் திணைக்களத்தின் அனுசரணையுடன் புனரமைக்கப்பட்டது.

மாரிகாலத்தில் இவ்வாய்க்கால் ஊடாக வெள்ள நீர் பாய்வதனால் இக்காலகட்டத்தில் மக்கள் போக்குவரத்துக்கு மிகவும் இடைஞ்சலாக உள்ளதாகவும் கோடைகாலத்தில் இவ் வாய்க்கால் ஊடாக வாகனங்கள் போவதனால் வாய்க்கால் தூர்ந்து போவதாகவும் இம் மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இம்மகஜரின் பிரதிகள் கமத்தொழில் உதவி ஆணையாளர், நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் ஆகியோருக்கு அனுப்பட்டுள்ளதாக அதன் பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார். (4-170)

## உடனடி வேலை வாய்ப்பு

Oman நிறுவனம் ஒன்றில் Quantity சேவையர்களுக்கு வேலை வாய்ப்பு உள்ளது. பின்வரும் தகுதியுடையோர் Quantity சேவையர் (QS) டிப்ளோமா முடித்து 2 வருடங்களுக்குக் குறையாத வேலை அனுபவம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

தொடர்பு:
**விள. இல. 2384,**
**மே/பா உதயன்.**
(36658) (24)

## அறிவித்தல்

தெல்லிப்பழைப் பிரதேச செயலக நலன்புரிச் சங்கத்தினரால் நேற்று (19.09.2004) ஞாயிறு அதிர்ஷ்டம் பார்க்கப்படவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் கலாசார விழா பிற்போடப்பட்டதனால் 01.10.2004 அன்று நடைபெறவிருக்கும் பொருள் காட்சியில் வைத்து காலை 9.30 மணிக்கு அதிர்ஷ்டம் பார்க்கப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

பிரதேச செயலக நலன்புரிச் சங்கம். - **செயலாளர்.**
தெல்லிப்பழை. (சி-37714) (24-14-44-43)

## மணமகள் தேவை

கனடாவில் இருந்து தற்பொழுது விடுமுறையில் இலங்கை வந்திருக்கும் மகனுக்கு தாயார் பொருத்தமான மணமகளைத் தேடுகின்றார்.

இனம்: கொழும்பு கௌரவ குடும்பம்.
வயது: 1972.08.09 உயரம்: 5'8"
படிப்புத் தகைமைகள்: I. Chartered Accountant.
II. Certified Public Accountant of U.S.A (C.P.A)
III. Certified General Accounts (C.G.A)
வேலைசெய்யும் இடம்: Toronto, Canada.
சமயம்: R.C
முக்கிய குறிப்பு:-
மணமகள் படித்த பெண்ணாய் இருத்தல் வேண்டும்.
இந்த விலாசத்திற்கோ அல்லது ரெலிபோனிலோ தொடர்பு கொள்ளவும்.

S.BASHAR
No.116/5, Benadict Mawatta, Kotahena,
Colombo - 13 T.P;:0112 343358

## தயவுசெய்து கையளிக்கவும்

மீசாலை கிழக்கு, மீசாலையைச் சேர்ந்தவரான வேலுப்பிள்ளை பாலசுந்தரம் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.592240475V), அலுவலக அடையாள அட்டை, நிரந்தர (வன்னி) பயண அனுமதி அட்டை, வாகன சாரதி அனுமதிப்பத்திரம் இல.A007145481, வாகனப் பதிவுப் புத்தகம் 500-5103, வரிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம் ஆகியவை காணாமற்போய்விட்டன. அவற்றைக் கண்டவர்கள் தயவுசெய்து கீழுள்ள முகவரியில் கையளித்து உதவவும்.

தொடர்பு: திருமதி கோ.பாலசுந்தரம்
யாழ். போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.
(சி-37714) (24)

## விற்பனைக்கு

உ
சிவமயம்

புதிய கட்டில்கள் (3x6, 4½x6) அதற்குரிய மெத்தைகள், சோபா, செற்றிகள், மைனர் காருக்கு பாவிக்கும் மேல் கரியல் மொறிஸ் ஒஸ்போட் காரின் கொயில் ஸ்பிறிங், புத்தகம், கொப்பி அமத்தும் இயந்திரம் மற்றும் மர அலுமாரிகளும் விற்பனைக்குண்டு.

த.குமாரசாமி,352, நாவலர் வீதி,
(36609)(39) யாழ்ப்பாணம்.

## சனசமூகநிலையக் கட்டடத்துக்கு அடிக்கல்

வரணி வடக்கு விநாயகர் சனசமூக நிலையத்திற்குப் புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ளது.இதற்கான அடிக்கல் கடந்த 15ஆம் திகதி நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜினால் நாட்டப்பட்டது. (4-117)

# கண்ணீர் அஞ்சலி



மலர்வு 23 - 01 - 1943

உதிர்வு 13 - 09 - 2004

**அமரர் எலியாஸ் ஜெயராஜா**

(பிரபல கட்டட ஒப்பந்தகாரரும்,
சாமினி காட்வெயர் உரிமையாளரும்)

மனிதரில் மாணிக்கமாய் மாந்தருள் திலகமாய்
புனித வாழ்வு வாழ்ந்து இன்று மறைந்து விட்டீர்!
உங்கள் ஆத்ம சாந்திக்காக ஆண்டவனை வேண்டுகின்றோம்.

33/8,சிவபுரி, அன்ரனி, கிப்பொலிற்று, செல்வராசா
திருகோணமலை. (36661)(39-14-44-43) குடும்பத்தினர் (கனடா).

# கண்ணீர் அஞ்சலி



மலர்வு 23 - 01 - 1943

உதிர்வு 13 - 09 - 2004

**அமரர் எலியாஸ் ஜெயராஜா**

(பிரபல கட்டட ஒப்பந்தகாரரும்,
சாமினி காட்வெயர் உரிமையாளரும்)

மனிதரில் மாணிக்கமாய் மாந்தருள் திலகமாய்
புனித வாழ்வு வாழ்ந்து இன்று மறைந்து விட்டீர்!
உங்கள் ஆத்ம சாந்திக்காக ஆண்டவனை வேண்டுகின்றோம்.

33/8,சிவபுரி, ஆ.ஜீவராஜா-கிளி (குழுமகஸ்)
திருகோணமலை. (36662)(39-14-44-43) பிரான்ஸ் (குடும்பத்தினர்)

# மரண அறிவித்தல்



**சி.யோ.செபரத்தினம்**

(ஓய்வு பெற்ற ஆசிரியர், கண்டி சில்வெஸ்ரர் கல்லூரி, காங்கேசன்துறை நடேஸ்வரக் கல்லூரி)

வயாவிளானைப் பிறப்பிடமாகவும் பத்தாவத்தையை வாழ்விடமாகவும் இல.97(17), செம்மணி வீதி, நல்லூரைத் தற்போதைய வசிப் பிடமாகவும் கொண்ட சி.யோ.செபரத்தினம் 18.09.2004 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சூ.சின்னப்பு அன்னப்பிள்ளையின் ஏக புத்திரனும் மகிமைநாயகியின் அன்புக் கணவரும் வசந்தராசா (ஆஸ்திரேலியா), நேசராசா (தொழில் நுட்பக் கல்லூரி வட்டுக்கோட்டை முன்னாள் ஆசிரியரும், தற்போதைய வெள்ளவத்தை, கொழும்பு Yourcitadel கல்வி நிலைய நிர்வாகியும்), வசந்தராணி, சயந்தராணி, ஜெயராசா ஆகியோரின் அன்புத் தந்தையும் அ.ஞானேந்திரன் (ஆசிரியர், புனித பத்திரிசியார் கல்லூரி), வ.ஆனந்தி (ஆஸ்திரேலியா) மகிமைநாயகி ஆகியோரின் அன்பு மாமனாரும் சிங்கநாயகம் ஞானம்மா, அந்தோனிப்பிள்ளை இராசம்மா காலஞ்சென்ற யோகரத்தினம் சின்னத்தங்கம் (மரியரத்தினம்), திரேசம்மா, நேசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் மரியதர்ஷினி, மதிவதனி, அன்ரனி, நேசானந்தன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.09.2004) திங்கட்கிழமை பி.ப.2.30 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.(97)(17),செம்மணி வீதி,
நல்லூர்,யாழ்ப்பாணம்.
(36659)(39-14-44-43)

தகவல்:
அ.மாசிலாமணி,
மருமகன், வயவையூரான்.



யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், தாலமூலவள நிறுவன இயக்குநர் வி.ஜி.தங்கவேல் ஆகியோரால் எழுதப்பட்ட 'பனைச்செல்வம்' என்னும் நூலின் வெளியீட்டு விழா நேற்றுமுன்தினம் யாழ்.பல்கலைக்கழகக் கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது. நூலாசிரியர்களில் ஒருவரான வி.ஜி.தங்கவேல், அறவழி நிலையத் தலைவர் டாக்டர் எஸ்.அருளானந்தம், நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன், விவசாய பீடாதிபதி சு.இராஜதுரை, துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஆகியோரையும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் முதல் மூன்று படங்களிலும் காணலாம். நூலின் முதற்பிரதியை பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளையிடமிருந்து வடமாகாண பனை, தென்னை வள அபிவிருத்தி சமாசத் தலைவர் கி.தவராஜா பெற்றுக்கொள்வதை அடுத்துள்ள படத்தில் காணலாம். *(படங்கள்: தீபன்)*

# தியாகதீபம் லெப்.கேணல் திலீபனின் நினைவு நிகழ்வு வடமராட்சி கிழக்கில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு

வடமராட்சிகிழக்கு,செப்.20

தியாகதீபம் லெப்.கேணல் திலீபனின் 17 ஆவது ஆண்டு நினைவு தினம் வடமராட்சி கிழக்கில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

அரச அலுவலகங்கள், பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், கடற்புலிகளின் அலுவலகங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பொது இடங்களில் திலீபனின் உருவப்படங்கள் வைக்கப்பட்ட பந்தல்கள் நிறுவப்பட்டுள்ளதுடன் அவை சிவப்பு, மஞ்சள் கொடிகளினால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. அத்துடன், தினமும் அவரது தியாகத்தை நினைவுகூரும் நிகழ்வுகளும் இடம்பெற்று வருகின்றன.

அதேவேளை - பாடசாலைகளினாலும், பொது அமைப்புகளின் ஏற்பாட்டிலும் பல்வேறு இடங்களில் சிரமதானங்களும் நடைபெற்று வருகின்றன.

எதிர்வரும் 24ஆம் திகதி வெற்றிலைக்கேணியிலும், 25ஆம் திகதி செம்பியன்பற்று தெற்கிலும் அடையாள உண்ணாவிரதமும் வீர அஞ்சலிக் கூட்டமும் நடைபெறவுள்ளன.

இறுதிநாள் நிகழ்வுகளை 26ஆம் திகதி உடுத்துறையில் நடத்துவதற்கான ஏற்பாடுகளை வடமராட்சி கிழக்குக் கடற்புலிகள் அரசியல்துறை ஏற்பாடு செய்துள்ளது.

இந்நிகழ்வில் காலையிலிருந்து மாலை வரை உண்ணாவிரதமும் இறுதியில் வீர அஞ்சலிக் கூட்டமும் நடைபெறவுள்ளன. வடமராட்சி கிழக்கில் உள்ள பாடசாலை மாணவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் இந்நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளனர்.

கடற்புலிகளின் உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் உரையாற்றுவார்கள். (எ-182)

## ஆன்மீகச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,செப்.20

இந்து சமய விவகார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகம் நடத்தும் 'அன்பு வலையில் வீழ்ந்த வேடன்' எனும் தலைபிலான ஆன்மீகச் சொற்பொழிவு எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 6.30 மணிக்கு நல்லூர் நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்து சமய விவகார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் சொற்செல்வன் இரா. கேதீஸ்வரன் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார். (எ-6)

# நெடுந்தீவிலும் உணர்வுபூர்வமாக தியாகி திலீபன் நினைவு நிகழ்வுகள்

நெடுந்தீவு,செப்.20

உண்ணா நோன்பிருந்து உயிர்த்தியாகம் செய்த லெப்.கேணல் தியாக தீபம் திலீபனின் 17 ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வுகள் நெடுந்தீவில் மிகவும் உணர்ச்சிபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன.

கடந்த 15 ஆம் திகதி முதல் பாடசாலைகள், கூட்டுறவு நிலையங்கள், திணைக்களங்கள் என்பன எழுச்சிக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருப்பதுடன், தியாக தீபம் திலீபனின் திருவுருவப் படம் வைத்து நாள்தோறும் மலர் அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகளும் இடம்பெற்று வருகின்றன.

அத்துடன், வர்த்தக நிலையங்கள், பொது அமைப்புகள் என்பவற்றினால் பிரதான வீதி சிவப்பு, மஞ்சள் கொடிகளினால் அலங்கரிக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (எ-112)

# குறிகாட்டுவான் - நெடுந்தீவு பயணிகள் சேவையில் மீண்டும் குமுதினிப் படகு

திருத்த வேலைகள் காரணமாகக் கடந்த பல மாதங்களாக நெடுந்தீவிற்கும் - குறிகாட்டுவானுக்கும் இடையில் சேவையில் ஈடுபடுத்தப்படாமலிருந்த வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான குமுதினிப் படகு மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை முதல் சேவையில ஈடுபடுத்தப்பட்ட இந்தப் படகானது ஏற்கனவே நடைபெற்றுவந்த நேர அட்டவணையின்படி மீண்டும் சேவையில் ஈடுபட்டு வருகின்றது.

சீரற்ற காலநிலைக்குரிய காலப்பகுதிகள் நெருங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில், குமுதினிப் படகு மீண்டும் சேவையில் ஈடுபட்டிருப்பது கடற்போக்குவரத்தில் ஏற்படக்கூடிய நெருக்கடிகளைக் குறைத்துவிடும் எனப் பொது மக்கள் தரப்பில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

குமுதினிப் படகு கடந்த பல மாதங்களாகத் திருத்த வேலைகளுக்காக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்ததால் இந்தப் படகுக்கு ஈடான பிறிதொரு படகுச் சேவை இன்மையால் இப்பிரதேச மக்கள் மாரிகாலத்திலும், பெரும் காற்றுக் காலங்களிலும் பெரும் துன்பங்களையும், கஷ்டங்களையும் அனுபவித்துவந்தமை தெரிந்ததே. (எ-112)

# ஆழியவளை, உடுத்துறை கிராமங்களுக்கு விரைவில் மின்சாரம் கிடைக்கும்

பருத்தித்துறை,செப்.20

மருதங்கேணி, செம்பியன்பற்று, தாளையடி, உடுத்துறை, ஆழியவளை ஆகிய கிராமங்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போது பளை நகரத்திற்கு மின்சாரம் வழங்கப்பட்டதையடுத்து, அங்கிருந்து ஏ-9 வீதியூடாகப் புதுக்காட்டுச்சந்தி வழியாக மருதங்கேணி வரைக்கும் உயர் அழுத்த மின்சார இணைப்பு வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

உயர் அழுத்த மின் இணைப்பு வழங்கப்பட்டதும், இக்கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்படும்.

இதேவேளை - முகமாலையில் உள்ள புலிகளின் சோதனைச் சாவடிக்கு மின் இணைப்பு வழங்குவதற்கான மின் அமைப்பு வேலைகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளன. (எ-118)

# உபதபால் நிலையம் இயங்கவில்லை ஆனையிறவு மக்கள் சிரமம்

ஆனையிறவு உபதபால் நிலையம் திறக்கப்படாமையினால் இப்பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்த மக்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றார்கள்.

1991 ஆம் ஆண்டு ஆனையிறவு படைத்தளத்தின் மீதான தாக்குதலையடுத்து இந்த உபதபால் நிலையம் இடம்பெயர்ந்து பளைப்பகுதியில் இயங்கிவந்தது. பின்னர் அங்கு கடமையாற்றிய உப தபாலதிபர் கடமையில் இருந்து இளைப்பாறியதுடன் உப தபால்நிலையமும் மூடப்பட்டது.

தற்போது ஆனையிறவு, தட்டுவன்கொட்டி கிராமத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்ததாலும் ஆனையிறவு உப்பளம் மீள இயங்கத் தொடங்கியமையினாலும் அப்பகுதியில் பெருந்தொகையான குடும்பங்கள் மீளக்குடியமரத் தொடங்கியுள்ளன. (எ-182)

# வரணி - வேம்பிராய் வீதியின் ஒருபகுதியே திருத்தப்பட்டது

வரணி - வேம்பிராய் வீதியில் ஒரு பகுதி வீதி மட்டும் தற்சமயம் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினால் திருத்தப்பட்டுள்ளது.

வரணி மகாவித்தியாலயத்திலிருந்து வன்னியாசி மதவு வரையான சுமார் 2 கிலோ மீற்றர் நீளமான பகுதியே தற்சமயம் திருத்தப்பட்டுள்ளது.

வன்னியாசி மதவுப் பகுதியிலிருந்து வேம்பிராய் சந்திவரையான மிகுதிவீதி திருத்தப்படவில்லை. கடந்த காலத்தில் இப்பகுதி கடும் யுத்தப் பிரதேசமாக இருந்தமையினால் படுமோசமாகப் பழுதடைந்திருக்கிறது.

தற்சமயம் வாகனங்கள் பெரும்சிரமத்தின் மத்தியிலேயே பிரயாணம் செய்யவேண்டியுள்ளது. தற்சமயம் யாழ்ப்பாணத்திலிருந்து சாவகச்சேரி ஊடாக வரணிக்குப் போகும் மினிபஸ் சேவை இந்தப் பாழடைந்த வீதியின் ஊடாகவே நடைபெற்றுவருவது குறிப்பிடத்தக்கது.(4-170)

# மூன்று பிரதேச அபிவிருத்திப் பணிகளை ஜி.ரி.இசற் நிறுவனம் பொறுப்பேற்கும்

வடமராட்சிகிழக்கு,செப்.20

வடமராட்சி கிழக்கு மற்றும் சாவகச்சேரி,




ஆகிய பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அபிவிருத்தி வேலைகளை ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் (ஜி.ரி.இசற்) மேற்கொள்ளவுள்ளது.

கல்வி, சுகாதாரம், வீதி, வீடமைப்பு உட்பட அப்பிரதேசங்களில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்திப் புனரமைப்பு வேலைகளை 5 ஆண்டுத் திட்டத்தின்கீழ் மேற்கொள்வதற்கான திட்டங்கள் தயாரிக்கப்படவுள்ளன.

இவை சம்பந்தமான ஆலோசனைக் கூட்டமொன்று கடந்த வியாழக்கிழமை மருதங்கேணியிலுள்ள வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் பணிமனையில் வடமராட்சி கிழக்கு உதவித் திட்டமிடல் உத்தியோகத்தர் எஸ்.ஈஸ்வரபாதம் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி கரட்வா கலந்துகொள்வார். (எ-187)

# சாவகச்சேரி சுகாதாரப் பிரிவில் வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட சாவகச்சேரி, மட்டுவில் ஆகிய இடங்களில் பின்வரும் திகதிகளில் வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று திங்கட்கிழமை - சாவகச்சேரி உதயசூரியன் சனசமூக நிலையம், சாவகச்சேரி புனித லிகோரியார் தேவாலயம், சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை -

நாளை செவ்வாய்க்கிழமை - சாவகச்சேரி நகரசபை அலுவலகம், கல்வயல் முன்பள்ளி-

இம்மாதம் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை நுணாவில் மேற்கு அம்பாள் சனசமூக நிலையம், கெருடாவில் ஸ்ரீமுருகன் சனசமூக நிலையம்-

இம்மாதம் 25ஆம் திகதி சனிக்கிழமை - மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலையம், கைதடி நுணாவில் குமரகுருபரன் சனசமூக நிலையம் -

அடுத்த மாதம் 11ஆம் திகதி மட்டுவில் வடக்கு அம்பாள் சனசமூக நிலையம், மட்டுவில் மோகனதாஸ் சனசமூக நிலையம் -

அடுத்த மாதம் 12ஆம் திகதி மட்டுவில் வடக்கு வேற்பிள்ளை சனசமூக நிலையம், மட்டுவில் வடக்கு கண்ணகை சனசமூக நிலையம்-

அடுத்த மாதம் 15ஆம் திகதி மட்டுவில் மத்தி சனசமூக நிலையம், மட்டுவில் முன்பள்ளி-

அடுத்த மாதம் 16ஆம் திகதி கைதடி நுணாவில் சனசமூக நிலையம், கைதடி நுணாவில் முன்பள்ளி -

அடுத்த மாதம் 19ஆம் திகதி மட்டுவில் ஆரம்ப சுகாதார நிலையம், மட்டுவில் முன்பள்ளி ஆகிய இடங்களில் வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றப்படுமென சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைப் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளர். (எ-31-117)

# அடிப்படை வசதிகள் இன்றி பளை அ.த.க. பாடசாலை

பளை, மாசார் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை எந்தவொரு அடிப்படை வசதியுமின்றி இயங்கி வருகிறது. இதனால், இப்பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ளன.

இராணுவ நடவடிக்கைகளாலும் விமானக் குண்டு வீச்சினாலும் இடித்துத் தரை மட்டமாக்கப்பட்ட பாடசாலை, 2002ஆம் ஆண்டு தற்காலிகக் கொட்டகை அமைத்து அதில் இயங்கத் தொடங்கியது.

இரண்டு வருடங்களாகப் பாடசாலை இயங்கி வந்தது. கடும்காற்றினால் கூரைக் கிடுகுகள் எடுத்துச் செல்லப்பட்டதோடு, நிலம் புழுதியாகக் காட்சியளிக்கிறது. அத்தோடு, அதிபர் அலுவலகமும் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

மழை காலத்தில் இங்கு கற்கும் மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்கு வகுப்பறை வசதிகள் இல்லாததால் அவர்களின் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் மந்தகதியிலுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. தற்காலக் கல்விச் சீர்திருத்தத்திற்கமைவாகக் கல்விச் செயற்பாடுகள் எதனையும் மேற்கொள்ள முடியாதுள்ளதாகவும் அப்பகுதிக் கல்விச் சமூகத்தினர் பெரும் கவலை தெரிவிக்கின்றனர்.

கற்றல் உபகரணங்களோ, விளையாட்டு உபகரணங்களோ, விளையாட்டு மைதானமோ இல்லாத நிலையில் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றனர். மலசல கூட வசதிகள் குறைவாகவே உள்ளன. இவ்வாறான பல அடிப்படை வசதிகளற்ற நிலையில் பாடசாலை இயங்கிவருகிறது. (4-36)

# கண்ணீர் அஞ்சலி



யாழ். வணிகர் கழகத்தின் மூத்த உறுப்பினரும் முன்னாள் தலைவரும்
தற்போதைய உப செயலாளரும்
யாழ்ப்பாணம் லிங்கம் ஸ்ரோர்ஸ் உரிமையாளருமாகிய

# விஸ்வலிங்கம் குலரத்தினம்

அவர்கள்

17.09.2004 அன்று காலமானதையிட்டு யாழ். வணிகர் கழகம் தனது ஆழ்ந்த துக்கத்தினை அனைத்து வணிகர்கள் சார்பிலும் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரது மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் அவர் ஸ்தாபன ஊழியர்களுக்கும் எமது மிகுந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மசாந்திக்காக எல்லாம்வல்ல இறைவனை அனைவரும் வேண்டுவோமாக.

**யாழ்ப்பாணம் வணிகர் கழகம்**

(சி-37711) (24-14-44)

# திலீபன் நினைவு நாள் நிகழ்வுகள் வன்னியில் எழுச்சியுடன் ஆரம்பம்

ஒட்டுசுட்டான்,செப்.20

தியாகதீபம் லெப்டினன்ட் கேணல் திலீபனின் 17ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் வன்னிப் பெருநிலப்பரப்பில் பல பாகங்களிலும் உணர்வெழுச்சியுடன் நடைபெற்றுவருகின்றன.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் கிராமரீதியாக இந்த நிகழ்வுகள் நடைபெற்றுவருகின்றன. வீதி எங்கும் சிவப்பு, மஞ்சள் கொடிகளாலும் வாழை தோரணங்களாலும் முக்கிய வளைவுகளில் பதாகைகள் கட்டப்பட்டும் அலங்கரிக்கப்பட்டுள்ளன. அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள், பாடசாலைகள், இயக்க அலுவலகங்கள், பொது அமைப்புக்கள் நிலையங்கள், பொது மண்டபங்கள், மாவீரர் மண்டபங்கள், பாசறைகள் வெகு எழுச்சியாக அலங்கரிக்கப்பட்டும் திலீபனின் உருவப்படம் வைக்கப்பட்டும் மிகவும் உணர்வெழுச்சியுடன் நடைபெற்றுவருகின்றன.

கற்சிலைமடு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் திலீபனின் உருவப்படம் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டுவருகிறது.

ஆரம்ப நாளன்று நடைபெற்ற நிகழ்வில் பொதுச்சுடரினை முல்லை. மாவட்ட மாவீரர் குடும்ப நலன் காப்பகப் பொறுப்பாளர் வேணுகோபால் ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக் கொடியினை முல்லை. மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் பூங்குன்றன் ஏற்றினார்.

திலீபனின் உருவப் படத்திற்கான ஈகச் சுடரினை முத்தையன்கட்டு நீர்ப்பாசனத் திணைகளப் பொறியியலாளர் சண்முகராசா ஏற்றினார். மலர் மாலையினை ஒட்டுசுட்டான் அரசியல் துறைப் பொறுப்பாளர் கதிர் அணிவித்தார்.

அகவணக்கத்தினைத் தொடர்ந்து மலர் வணக்கம் இடம்பெற்றது.

நினைவுரைகளை ஒட்டுசுட்டான் ப.நெ.வ. அ.கூ.சங்க நிர்வாகி சிவகுமார், கற்சிலைமடு பாடசாலை மாணவி நிமாலினி, ஒட்டுசுட்டான் அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் ஈழவன் ஆகியோர் ஆற்றினர்.

விசுவமடுப் பிரதேசத்தில் விசுவமடு மாவீரர் மண்டபத்தில் கடந்த 15ஆம் திகதி காலை நிகழ்வுகள் ஆரம்பமாகின.

விசுவமடு வர்த்தக சங்கத்தலைவர் ஞானம தலைமையில் நிகழ்வுகள் காலை 9.45 மணிக்கு ஆரம்பமாகின. தமிழீழத் தேசியக் கொடியை விசுவமடுப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் ந.தமிழரசன் ஏற்றிவைத்தார். மண்டபத்தில் திலீபனின் திருவுருப்படத்திற்கு ஈகச் சுடரேற்றி மலர்மாலையை கிளிநொச்சி - மாவட்ட பெண்கள் மேம்பாட்டு நிறுவனத் தலைவி திருமதி தேவாம்பிகை காசிநாதன் அணிவித்தார்.

கருத்துரையினை விசுவமடு மாவீரர் துயிலும் இல்லப் பொறுப்பாளர் சீத்தாராம் வழங்கினார். நிகழ்வில் பெருமளவு மக்கள், வர்த்தக சங்கத்தினர் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இதேபோன்று வன்னிப்பெருநிலப் பரப்பின் ஏனைய பகுதிகளிலும் திலீபனின் நினைவு நாள் நிகழ்வுகள் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன.

பிரதான வீதிகள், சந்திகள், பொது இடங்கள் சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன. எழுச்சிப்பாடல்களும் ஒலிபரப்பட்டு வருகின்றன.

விசேட பந்தல்களில் திலீபனின் திருவுருப்படம் வைக்கப்பட்டு தினமும் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெறுகின்றன. (4-341-352-405)

## ஒட்டுசுட்டானில் நாய்களால் தொல்லை

ஒட்டுசுட்டான்,செப்.20

கற்சிலைமடுப்பகுதியில் கட்டாக்காலி நாய்களின் அட்டகாசம் அதிகரித்துவருவதுடன் இப்பகுதியில் மக்கள் நாய்க்குட்டிகளை ஆங்காங்கே விடுவதால் அவைகள் வாகனங்களில் அடிபட்டும் உணவின்றியும் ஆங்காங்கே இறந்துகிடக்கின்றன. சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டு வருகிறது. இரவுவேளைகளில் நாய்கள ஊளையிடும் சத்தம் சகிக்க முடியாதுள்ளது. இதனால், பலர் கடியுண்டு வைத்தியசாலைக்குச் செல்லவேண்டியநிலை ஏற்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பாக பிரதேச சபையினர் கூடிய கவனம் செலுத்திச் சம்பந்தப்பட்டோர் மீது உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளவேண்டும் என்று மக்கள் கோரியிருக்கின்றனர். (4-341)




## வைத்தியர் இல்லாத மருத்துவமனை!

ஒட்டுசுட்டான்,செப்.20

முள்ளியவளை அரசினர் வைத்தியசாலையில் தற்போது வைத்தியர்கள் எவரும் இல்லாததால் அங்கு செல்லும் நோயாளர் பெரும் ஏமாற்றத்துடன் திரும்புகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுகின்றது.

இந்த வைத்தியசாலையில் இருந்த நிரந்தர வைத்தியர், வெளிமாவட்டத்திற்குச் சென்றுள்ளார். அவரது இடத்திற்குப் பதில் வைத்தியர் நியமிக்கப்படவில்லை. கடந்த 13ஆம் திகதி முதல் வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளர்கள் பெரும் ஏமாற்றத்துடன் திரும்புகின்றனர்.

இதேவேளை, மேற்படி வைத்தியசாலையின மகப்பேற்று விடுதியில் இருந்த நிறை மாதக் கர்ப்பிணித்தாய்மார் சிலர் வைத்தியர் இன்மையால் முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்குச் செல்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுவருகின்றனர்.

இப்பகுதியில் செஞ்சிலுவைச் சங்கத்தினால நடத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமும் மூடப்பட்டுள்ளமையால் நெடுந்தூரங்களில் இருந்து வரும் நோயாளர்கள் தொகை அதிகரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். இந்நிலையில், நோயாளர்களின் அவல நிலையினைக் கருத்திற்கொண்டு உடனடியாக வைத்தியர் ஒருவரை நியமிக்க சுகாதாரப் பகுதியினர் முன்வரவேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்திருக்கின்றனர். (4-341)

## முல்லை - மாங்குளம் வீதி திருத்தப்படுகின்றது

ஒட்டுசுட்டான்,செப்.20

முல்லைத்தீவு - மாங்குளம் பிரதான வீதியின் திருத்த வேலைகள் ஆரம்பமாகியுள்ளன. பல வருடங்களாகப் புனரமைக்கப்படாத இவ்வீதி போக்குவரத்துகளுக்கு மிகவும் பாதிப்பாக இருந்தது. இவ்வீதியின் ஆரம்ப வேலையாக கிரவல் பரப்புவேலை நடைபெற்றுவருகிறது. (4-341)

## சுகாதாரக் குறைபாடுகளுடன் இயங்கிய வெதுப்பகங்களுக்கு சீல்!

விசுவமடு,செப்.20

புதுக்குடியிருப்பு, விசுவமடுப் பகுதிகளில் சுகாதாரக் குறைபாடு உடைய வெதுப்பகங்கள் இரண்டு தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்புப் பகுதியில் அமைந்துள்ள வெதுப்பகம் ஒன்றில் உற்பத்தி செய்யப்பட்ட வெதுப்பி ஒன்றில் வண்டு காணப்பட்டுள்ளதாலும், விசுவமடுப் பகுதியில் உள்ள வெதுப்பகத்தில் உற்பத்தி செய்யப்பட்ட வெதுப்பி ஒன்றினுள் அட்டை காணப்பட்டுள்ளதாலும் தமிழீழ சுகாதார சேவையினரின் முல்லை மாவட்டத்தினர் பரிசோதனை மேற்கொண்டனர்.

வண்டு, அட்டை விழுவதற்கு சந்தர்ப்பமாக இருந்த மேற்படி இரண்டு வெதுப்பகங்களினையும் தற்காலிகமாக மூடியுள்ளனர்.

அடிப்படை சுகாதாரக் குறைபாடுகளினை நிவர்த்தி செய்த பின்னரே அவற்றை மீண்டும் திறக் கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (4-402)

## உயர்தகைமைப் பயிற்சி நெறி


வட்டக்கச்சி,செப்.20

கட்டுமானத் தொழில் நுட்பவியல் பயிற்சி நெறி, மரவேலை தொழில்நுட்பவியலாளர் பயிற்சிநெறி ஆகியவற்றை கிளிநொச்சி மாவட்ட தொழில்நுட்பக் கல்விநிறுவனத்தில் பூர்த்திசெய்தவர்களுக்கான உயர் தகைமைப் பயிற்சிநெறி இம்மாத இறுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இக் கற்கைநெறியைத் தொடருவோருக்கு நாளாந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவாக 350 ரூபா வழங்கப்படவுள்ளது. இதற்கான நிதியுதவியினை 'போரூட்' நிறுவனம் வழங்க முன்வந்துள்ளது.

இரு கற்கைநெறிகளிலுமிருந்து தலா 75 பேர்வீதம் 150 பேர் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர் எனவும் இக்கற்கை நெறிமுடிவில் உயர்தகைமைச் சான்றிதழ் வழங்கப்படும் எனவும் தொழில்நுட்பக்கல்வி நிறுவன அதிபர் தி.பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

வன்னிப் பிரதேசத்தில் கட்டுமானப்பணிகள் துரிதமாக நடைபெற்றுவரும் இக்காலகட்டத்தில் இவ்வாறான பயிற்சி நெறிகள் மிகவும் பயனுடையதாக அமையும் என்பது பலரதும் எதிர்பார்ப்பாகும். (4-405)





கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு முன்னால் இருந்து 'சத்ஜெய' இராணுவ நடவடிக்கை மூலம் அழிக்கப்பட்ட பாரிய நீர்த்தாங்கியின் ஒரு பகுதியையும் அதே இடத்தில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினால் வடக்கு - கிழக்கு அவசர புனரமைப்புத் திட்டத்தின் (NEERP) கீழ் 1000 கன மீற்றர் கொள்ளவில் நிர்மாணிக்கப்பட்டுவரும் நீர்த் தாங்கியையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்: வட்டக்கச்சி செய்தியாளர்)*

## கண்டாவளைப் பிரதேச மக்களுக்கு வரட்சி நிவாரணம் வழங்க ஏற்பாடு

பரந்தன்,செப்.20

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள 16 கிராம சேவகர் பிரிவுகளில் 2 ஆயிரத்து 900 இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு வரட்சி நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

இந்த வரட்சி நிவாரண வேலைகளாக விவசாய வீதிகள், தண்ணீர் பாயும் வாய்க்கால்கள் போன்றவற்றின் திருத்தவேலைகள் இடம் பெற்று வருகின்றன.

நிவாரணம் மற்றும் உலர் உணவு நிவாரணம் என்பவற்றைப் பெறாத குடும்பங்களுக்குத் தலா ஆயிரத்து 460 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன. (4-352-202)

## முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகளின் தமிழ்மொழிக் கலைத்திறன் போட்டி முடிவுகள்

ஒட்டுசுட்டான்,செப்.20

கடந்த முதலாம், இரண்டாம் திகதிகளில் ஒட்டு சுட்டான் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற முல்லைத்தீவு மாவட்ட தமிழ்மொழிக் கலைத்திறன் போட்டிக ளின் முடிவுகளின் ஒரு பகுதி கடந்த 10ஆம் திகதி வெளியாகியிருந்தது. அதன் அடுத்த பகுதி வருமாறு.

பிரிவு - 4

***பேச்சு:***

முதலாம் இடம் - வே.கிளக்ஷா (யோகபுரம் ம.வி.), இரண்டாம் இடம் - ம.தாமரைச் செல்வி (முல்லைத்தீவு ம.வி.), மூன்றாம் இடம் - வே. கஜந்தினி (ஒட்டுசுட்டான் ம.வி.).

***பாவோதல்:***

முதலாம் இடம் - ம.கெலன்கஜாலினி (முல்லைத்தீவு ம.வி.), இரண்டாம் இடம் - ஆ.றஞ்சிதா (கற்சிலைமடு அ.த.க.), மூன்றாம் இடம்: சி.கம்சாந்தினி (கரிப்பட்ட முறிப்பு அ.த.க.).

***இசை (தனி):***

முதலாம் இடம் - இ.யசோதா (வித்தியானந்தா கல்லூரி), இரண்டாம் இடம் - க.சுயித்திரா (முல்லைத்தீவு ம.வி.), மூன்றாம் இடம் - தே.தர்சினி (பாலிநகர் ம.வி.).

***நடனம் (தனி):***

முதலாம் இடம் - தே.ஆரணி (மல்லாவி மத்தியகல்லூரி), இரண்டாம் இடம் - வி.நிரஞ்சனா (உடையார்கட்டு ம.வி.)

பிரிவு - 5

***பேச்சு:***

முதலாம் இடம் - வி.நிஷால்டீன் (புதுக்குடியிருப்பு ம.வி.), இரண்டாம் இடம் - சோ. குகேந்திரன் (யோகபுரம் ம.வி.), மூன்றாம் இடம் - ஆ.சத்தியகலா (மல்லாவி மத்தியகல்லூரி).

***பாவோதல்:***

முதலாம் இடம் - ச.ஜெயந்திரன் (யோகபுரம் ம.வி.), இரண்டாம் இடம் - எ.பௌசிகா (வித்தியானந்தாக் கல்லூரி), மூன்றாம் இடம் - செ.மேரியுஸ்ரலா வேஜின் (முல்லைத்தீவு ம.வி.) (8-341-353)

*(வளரும்)*

## ஊனமுற்றோரின் நலவாழ்வுக்காக கொடிவாரத்தில் நிதி சேகரிப்பு

வட்டக்கச்சி,செப்.20

கிளிநொச்சி ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் கொடிவாரம் கடந்த 13ஆம் திகதியில் இருந்து 19ஆம் திகதி வரை நடத்தப்பட்டது. இதன்போது பல்வேறு துண்டுப் பிரசுரங்கள் மூலமும் பிரசாரங்கள் மூலமும் ஊனமுற்றோர் தொடர்பாகவும், அவர்களது உரிமைகள், புனர்வாழ்வு தொடர்பாகவும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

அத்துடன், ஊனமுற்றோரது புனர்வாழ்விற்காகக் கொடிகள் வழங்கப்பட்டு நிதி சேரிக்கப்பட்டது. இந்நிதி சேகரிப்பு ஏ-9 சாலையில் பிரயாணம் செய்யும் பயணிகளிடமும் பாடசாலைகளிலும் உதவி வழங்கும் நிறுவனங்களிலும் மேற்கொள்ளப்பட்டன. ஊனமுற்றோரின் புனர்வாழ்வுக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்குமாறு ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தினர் கேட்டுக்கொள்கின்றனர். (4-405)

## வெட்டுவாகலில் மீனவர் இளைப்பாறு மண்டபம்

புதுக்குடியிருப்பு.செப்.20

முல்லைத்தீவு வெட்டுவாகல் பகுதியில் மீனவர் இளைப்பாற்று மண்டபம் ஒன்று அண்மையில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

ஓய்வு பெற்ற அதிபர் வேசண்முகம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அப்பகுதிக் கிராம சேவையாளர் தி.யாகராசா நாடாவை வெட்டித் திறந்துவைத்தார்.

இந்நிகழ்வில் கிராம மக்கள் பெருந்திரளாகக் கலந்துகொண்டனர். (4-353)

## மின்சாரசபை அலுவலகம் கிளிநொச்சியில் இல்லை!

கிளிநொச்சி மாவட்டத்தில் இலங்கை மின்சாரசபையின் அலுவலகம் இயங்காத காரணத்தால் மின்பாவனையாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். கிளிநொச்சியில முன்னர் இயங்கி வந்த அலுவலகம் இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்து வவுனியாவில் இயங்கி வந்தது. தற்போது அந்த அலுவலகம் யாழ்ப்பாணத்துக்கு மாற்றப்பட்டு இயங்கிவருகிறது. இதனால் மக்கள் பெரும் பாதிப்பை அடைகின்றனர்.

அத்தோடு பரந்தன் பகுதியிலுள்ள முரசுமோட்டை, கண்டாவளை, தருமபுரம் போன்ற பகுதிகளுக்கு மின் விநியோகம் இதுவரை வழங்கப்படவில்லையெனவும் மக்கள்விசனம் தெரிவித்துள்ளனர். (352)

## தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் - கொடிகாமம்
## பொது முகாமையாளர் பதவி வெற்றிடம் - முடிவுதிகதி நீடித்தல்

சம்பள அளவுத் திட்டம் - 5250 - 7750

120X10 - 130X10

சம்பளக் குறியீட்டு இல. 101/8

எமது சங்கத்தின் பொது முகாமையாளர் பதவி வெற்றிடம் தொடர்பாக 20.07.2004ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் வெளியாகிய விளம்பரத்தின் விண்ணப்ப முடிவு திகதி 30-09-2004 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றேன்.

தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம்.
கொடிகாமம்.
2004.09.15

தலைவர்,
தென்-கிழக்கு ப.நோ.கூ.சங்கம்,
கொடிகாமம்.

(சி-37709) (26-14-44)

## 90ஆவது நாள் நினைவஞ்சலி

மலர்வு 13 – 01 – 1964



உதிர்வு 20 – 06 – 2004

### திருமதி வசந்தராணி சிவபாலசுப்பிரமணியம்

புன்னகை பூக்குமுந்தன் பூமுகம் நிழலானதம்மா!
அன்போடு அணைத் தெடுத்து கண்ணையிமை
காப்பதுபோல் காத்தீர் அம்மா!
உயரன்பால் எமையணைத்து ஊட்டியென்றும்
பொன்போல் வளர்த்தீர் அம்மா!
உம் நினைவால் உருக்குலைந்து வாடுகின்றோம்
வாரும் அம்மா!

மாதகல் வடக்கு,
மாதகல்.
(36623)(42-14-44-26)
- குடும்பத்தினர்.





முதன் முறையாக
தொழிற்சாலையின்
5 வருட உத்தரவாதம்

License No : 50445
BS No : 5412 1996
License No : KM41240
Access Graphics

ஏக முகவர்கள்:
சென்ற் அந்தனீஸ் ஹார்ட்வெயார் (பிரைவேட்) லிமிட்டட்
516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 337286 (நேரடி), 324261-5, 337283-5
பெக்ஸ்: 446554

WATERTEC
முத்திரையை அவதானியுங்கள்

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர், 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


## பொது நிலையினர் தினத்தை முன்னிட்டுப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,செப்.20

யாழ்.மறைமாவட்ட பொதுநிலையினர் ஆணைக்குழுவின் 'பொதுநிலையினர் தினம்' எதிர்வரும் நவம்பர் மாதம் 21 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இத்தினத்தை முன்னிட்டு யாழ்.மாவட்ட ரீதியில் கவிதை, கட்டுரைப் போட்டிகளை நடத்துவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கட்டுரைகள் யாவும் 'நற்கருணை வழிநின்று பகிர்ந்து வாழும் குடும்பம்' என்ற தலைப்பில் ஐநூறு சொற்களைக் கொண்டதாகவும், கவிதைகள் 'கிறிஸ்தவ குடும்பம் திருச்சபையின் ஆணிவேர்' என்ற தலைப்பில் 30 வரிகளிலும் எழுதப்பட வேண்டும்.

ஆக்கங்கள் யாவும் பங்குத் தந்தையர் மூலம் உறுதிசெய்யப்பட்டு, எதிர்வரும் நவமபர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னதாகத் 'தலைவர், பொதுநிலையினர் ஆணைக்குழு, ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (9)

## வரணிப் பகுதியில் வீதிகள் சீரமைப்பு

வரணி,செப்.20

உலக உணவுத்திட்டத்தின்கீழ் வரணிப் பகுதியில் பாதை அமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மாசேரி, கரம்பைக்குறிச்சி, நாவற்காடு, குடமியன், வரணி, இயற்றாலை போன்ற இடங்களில் ஆரம்பக்கட்டமாக ஒழுங்கைகள் அகலமாக்குதல், கான்வெட்டுதல் போன்ற வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன. மாசேரி, கரம்பைக்குறிச்சிப் பகுதியில் முறையே சைவப் பிரகாச வித்தியாசாலை வீதியும் இடைக்குறிச்சி- கரம்பை ஊரெல்லை வீதியும் ஏற்கனவே வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-170)

## மருதங்கேணி பொதுச்சந்தையைப் புனரமைக்குமாறு கோரிக்கை

செம்பியன்பற்று,செப்.20

மருதங்கேணி பொதுச்சந்தை இதுவரைகாலமும் புனரமைக்கப்படாததால் இப்பகுதியில் வாழும் மீளக்குடியமர்ந்த மக்கள் தங்கள் அன்றாடத் தேவைகளைப் பூர்த்திசெய்யமுடியாமல் பெரும்சிரமங்களை எதிர்நோககி வருகின்றனர்.

இராணுவ நடவடிக்கைகளால் சிதைந்துபோன சந்தைக் கட்டடத்தில் இராணுவத்தினர் காவலரண் அமைத்து நிலைகொண்டிருந்தனர்.

பின்னர் இப்பகுதியிலிருந்து இராணுவத்தினர் விலகிவிட்ட பின்னரும் அக்காவலரண்கள் அகற்றப்படாமல் இருககிறது.

மக்கள் இப்பகுதியில் மீளக்குடியமர்ந்து மூன்று வருடங்களாகியும் இப்பொதுச்சந்தை புனரமைக்கப்படாததால் மக்கள் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு பளைச் சந்தைக்கோ, கிளிநொச்சி சந்தைக்கோ செல்லவேண்டியுள்ளதால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

ஆகவே, இப்பொதுச் சந்தையைப் புனரமைத்து வாரத்தில் எல்லா நாள்களும் இயங்கக் கூடியதாகச் செய்துதருமாறு இப்பகுதியில் மீளக்குடியமர்ந்த மக்கள் சமபந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.(4-36)

## வட இலங்கை சங்கீத சபை பரீட்சைகள் - 2005

வட இ.ச.சபையின் 2005ஆம் ஆண்டுப் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்கள் இன்று 2004-09-20 ஆம் திகதி முதல் விற்பனைக்குவரும். விண்ணப்ப முடிவுதிகதி 2004-12-01. விண்ணப்பப்படிவம் ஒன்றின் விலை அறிவுறுத்தல் பிரதியுடன் ரூபா முப்பது (30/-) மட்டும்.

விண்ணப்பப்படிவத்தைத் தபால்மூலம்பெறவிரும்புவோர் ரூபா 30/- பெறுமதியான காசுக்கட்டளையுடன் (மணி ஓடர்) ரூபா 4.50/- பெறுமதியான தபால் தலை ஒட்டிய, சொந்தமுகவரி எழுதப்பட்ட நீள் (10செ.மீ., 22 செ.மீ) கடித உறையை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த தேர்வுநாடிகள்
வட இலங்கைச் சங்கீத சபை,
யாழ்.கல்வி வலயம்,
செம்மணி வீதி, யாழ்ப்பாணம்
எனும் இடத்தில் பெற்றுக்கொள்ளவும்.

(சி-37702) (26-14-44) - வ.இ.ச.சபையினர்.

உ

## சுன்னாகம் வர்த்தகர் சங்கம்

### இரவுப் பாதுகாப்புச்சேவை உத்தியோகத்தர்கள் தேவை

சுன்னாகம் வர்த்தகர் சங்கத்தால் நடத்தப்படும் இரவுப் பாதுகாப்புச் சேவைக்குப் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை. அடிப்படை மாதச் சம்பளம் 5,200/=வும் மேலும் மேலதிக வேலை உட்பட மாதம் 6,000/=இற்கு மேற்பட்ட சம்பளம் பெறும் வாய்ப்பும் உண்டு.

உங்கள் விண்ணப்பப்படிவங்களை சுன்னாகம் வர்த்தக சங்கப் பணிமனையில் பெற்று 22.09.2004 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறவிருக்கும் நேர்முகப் பரீட்சையில் கலந்துகொள்ளவும்.

நிர்வாகம்,
சுன்னாகம் வர்த்தகர் சங்கம்.

தொடர்புகளுக்கு:
T.P.No.: 060– 2212779

(36474)(42-44-14-26)

## இலவச மருத்துவ முகாம்

### இலவச பாடசாலை மருத்துவப் பரிசோதனை

யாழ். மருத்துவபீட சமுதாய மருத்துவத்துறை மாணவர்களின் ஒழுங்கமைப்புடன் கிளி/மருத்துவ சங்க ஆதரவுடன் மாபெரும் இலவச மருத்துவப் பரிசோதனை முகாம் ஒன்று கிளிநொச்சி மாவட்ட கரைச்சிப் பிரதேசத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் தரம் 5 இற்கு உட்பட்ட மாணவர்களிடையே நடத்தப்படவுள்ளது.

இதற்கு சம்பந்தப்பட்ட அனைவரையும் ஒத்துழைப்பு நல்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கின்றோம்.

ஏற்கனவே ஒழுங்கமைக்கப்பட்டபடி பின்வரும் பாடசாலைகளில் 20,21,22 ஆம் திகதிகளில் நடைபெறும்.

1. கிளி/உருத்திரபுரம் மகா வித்தியாலயம்
2. கிளி/புனித பற்றிமா றோ.க.
3. கிளி/இந்து ஆரம்பப் பாடசாலை
4. கிளி/அக்கராயன் மகா வித்தியாலயம்
5. கிளி/ஸ்கந்தபுரம் இல.1
6. கிளி/ஸ்கந்தபுரம் இல.2
7. கிளி/கண்ணகைபுரம் அ.த.க.
8. கிளி/யூனியன் குளம் அ.த.க.
9. கிளி/அக்கராயன் அ.த.க.
10. கிளி/செல்வாநகர் அ.த.க.
11. கிளி/புதுமுறிப்பு விக்கினேஸ்வரா
12. கிளி/ஊற்றுப்புலம் அ.த.க.

மேலதிக பாடசாலைகள் இணைத்துக்கொள்ளப்படலாம்.

ஊடக அனுசரணை:
உதயன்

(சி37643)(34-14-44-26)


## வங்கியில் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கான வங்கியியல் கற்கைநெறிகள்
## புதிய பிரிவுகள் ஆரம்பம்

# ACBF, CBF

அடிப்படைத் தகைமைகள்
G.C.E. (A/L) 2 Passes and G.C.E. (O/L) 6 Passes with 5 Credits including Maths/Commerce & Accounts and Language (Tamil/English)
விண்ணப்ப முடிவுதிகதி:25-09-2004
விரிவுரைகள் ஆரம்பம்: 02-10-2004 (26-14-44)

INQUIRIES/REGISTRATION
DIRECTOR,
JAFFNA COLLEGE UNDERGRADUATE DEPT.
464, Hospital Road, Jaffna.
(சி-37559)

# காலத்தை வெறுமனே வீணடிக்காமல் கலைகளைக் கற்றுப் பயன்பெறுங்கள்



**தமிழகத்தைச் சேர்ந்தவரும் யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறை முன்னாள் மிருதங்க விரிவுரையாளரும் இலங்கையில் மிருதங்கக் கலையில் அளப்பரிய சேவையாற்றியவருமான மூத்த கலைஞர் ஏ.எஸ். இராமநாதன் அவர்கள் அண்மையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கௌரவிக்கப்பட்டார்.**

**அவருடனான நேர்காணலின் போது அவர் வழங்கிய கருத்துரைகள் இங்கே தரப்படுகின்றன.**

## மிருதங்க வித்துவான் ஏ.எஸ்.இராமநாதன் இளந் தலைமுறையினருக்கு ஆலோசனை

கேள்வி :- இலங்கையில் தங்களுக்கான வரவேற்பு எவ்வாறமைந்தது?

பதில் :- இலங்கையில் உள்ள பழம்பெரும் கலைஞர்கள், நடுத்தரக்கலைஞர்கள், இளங் கலைஞர்கள் போன்ற அனைவருமே என்னை மகிழ்ச்சியுடன் வரவேற்றுப் பாராட்டி அன்பு தெரிவித்தார்கள்.

இதனைக்கண்டு எனது உள்ளம் பூரிப்படைந்தது. இதனால் நலக்குறைவுடன் இருந்த எனது உடல் நலமாகிவிட்டது.

கேள்வி:- முன்பு இருந்த கற்றல், கற்பித்தல் முறைக்கும் தற்போதுள்ள கற்றல், கற்பித்தல் முறைக்கும் உள்ள வேறுபாடுபற்றி ஏதும் கூறமுடியுமா?

பதில்:- கலையும், கற்றல், கற்பித்தல் முறைகளும் மிக உயர்வாக வளர்ந்துவிட்டன. எமது காலத்தில் இருந்த கலை வளர்ச்சியைப் போனறு பத்துமடங்காக இன்று வளர்ச்சியடைந்துவிட்டது. இதனை ஐம்பது மடங்காக அதிகரிக்கும் வகையில் ஆர்வம் மிக்க கலைஞர்கள் இங்கு இருந்தபோதும், சூழ்நிலை காரணமாக அந்தளவுக்கு அதிகரிக்கமுடியவில்லை. இருந்தாலும் இந்தளவுக்கு வளர்ந்திருப்பது பாராட்டத்தக்கது.

**செவ்வி : சாம்பவி, தீபா.**
**படம் : தீபா**

கே: நீங்கள் மிருதங்கக் கலையைக் கற்பித்த உங்களுடைய மாணவர்கள் பற்றி அறிந்தீர்களா? அவர்களின் தற்போதைய நிலைப்பாடு என்ன?

ப: எனது மாணவர்களான அம்பலவாணர் பாக்கியநாதன், சின்னராசா மகேந்திரன், சிதம்பரநாதன், ஜம்புநாதன், ரகுநாதன், ஸ்ரீதரன், நேசராஜ் ஆகியோர் இலங்கையில் நல்ல நிலையில் உள்ளனர். தொலைக்காட்சி, வானொலி மற்றும் கச்சேரிகளில் இவர்கள் மிருதங்கம் வாசிப்பது பற்றிக் கேட்டபோது நான் மிகவும் மகிழ்சியடைந்தேன்.

உலகில் எல்லாப் பகுதிகளிலும் எனது மாணவர்கள் உள்ளனர். தென்னாபிரிக்காவில் பிரகலாதன் இரத்தினதுரை, ஆஸ்திரேலியாவில் ரவிச்சந்திரன் மதியாபரணம், ரவிதாஸ் நாராயணசாமி, ஜேர்மனியில் பிரணவநாதன் சண்முகரத்தினம், குஞ்சிதபாதம் சின்னப்பாப்பிள்ளை, கனடாவில் ஆனந்தபிரசாத் போன்றோர் இக் கலையில் புகழ்மிக்கவர்களாக உள்ளனர்.




யாழ்ப்பாணத்திலும் ஊருக்கு ஊர் எனது மாணவர்கள் உள்ளனர். அச்சுவேலி, உடுவில், கொக்குவில், கோண்டாவில், உரும்பிராய் என கீரிமலை வரை, எனது மாணவர்கள் உள்ளனர்.

கே: தற்போது மிருதங்கக் கலையைக் கறபித்துக் கொண்டிருக்கின்ற ஆசான்களுக்கு மூத்த கலைஞர் என்ற வகையில் தாங்கள் கூறும் ஆலோசனை என்ன?

ப: நான் கற்பிக்கும்போது எப்படி இருந்தேனோ அதுவே தற்போது மிருதங்கக் கலையைக் கற்பித்துக் கொண்டிருக்கின்ற எனது மாணவர்களுக்கு ஆலோசனையாக அமையும என்று நினைக்கின்றேன். இக்கலையைக் கற்பிக்கும் ஆசான்கள் முகமலர்ச்சியுடன் கற்பிக்க வேண்டும். மாணவர்களுடைய மனநிலையை அறிந்து செயற்படவேண்டும்.

மாணவன் ஒருவன் பாடசாலையிலிருந்து களைத்துவந்திருந்தால் நான் அவனைத் தொநதரவு பண்ணுவதில்லை. அந்தநேரம் பழைய பாடத்தை விடுத்துப் புதிய பாடத்தைக் கற்பிப்பேன். அச்சமயம் அவர்களது மனதில் புதிய உறசாகம் ஏற்படுவதுடன் கற்பதற்கான ஆர்வமும் ஏற்படும்.

நான் பல கச்சேரிகளுக்குச் சென்றிருக்கிறேன். அதில் கிடைக்கும் தொகையைப் பக்கவாத்தியக் கலைஞர்கள் அனைவருக்கும் பகிர்ந் தளிப்பதுடன், இந்தப் பக்குவத்தைத் தான் எனது மாணவர்களுக்கும் சொல்லிக் கொடுத் திருக்கிறேன். மகேந்திரன், சின்னராசா, சிதம்பரநாதன் ஆகியோரும் இதனையே கடைப்பிடிககிறார்கள்.

வெளிநாடுகளிலுள்ள எனது மாணவர்களும் அப்படியே செய்வார்கள் என்பது எனது நம்பிக்கை.

கே: மிருதங்கக்கலையைத் தற்போது கற்றுக்கொண்டிருக்கின்ற மாணவ சமுதாயத்திற்குத் தாங்கள் கூறும் அறிவுரை என்ன?

ப: தற்போது தொலைக்காட்சி பார்ப்பதிலேயே பலர் காலத்தைக் கழிக்கின்றார்கள். தாம் கற்ற கலையைத் தினமும் பயிற்சி பண்ண வேண்டும். "மற்றவர்களும் கற்கிறார்கள், நானும் கற்போமே" என 'ஸ்டைலுக்காகக்' கற்கக் கூடாது. கலையைக் கலைக்கண்கொண்டு ஆர்வத்துடன் கற்கவேண்டும்.

வயலின், மிருதங்கம் வாசிப்பவர்களோ அல்லது நடனம் ஆடுபவர்களோ எந்தக்கலைஞராக இருந்தாலும் அந்தக்கலையை அழுத்தமாக, லயத்தோடு செய்யவேண்டும்.

மாணவர்களுக்கு ஆர்வத்தை ஊட்டுவதில் பெற்றோர்களுக்கும் - குறிப்பர்கத் தாய்க்கும் பங்கு உண்டு. அவர்களைத் தொடர்ச்சியாகத் தொலைக்காட்சி பார்த்தல் மற்றும் பொழுது போக்குகளில் ஈடுபட அனுமதிக்காது, பயிற்சியை மேற்கொள்ளும் வகையில் தூண்ட வேண்டும். இதில் நான் நிறைய அனுபவப் பட்டுள்ளேன். எனவே, இதனை நான் அவர்களுக்கு அறிவுரையாக வழங்குகிறேன். ☆

# இனத்தின் தனித்துவ அடையாளங்களை புலப்படுத்தி நிற்கும் அரங்கேற்றங்கள்

**அண்மையில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற செல்வி டயானார்த்தி அரிய நாயகத்தின் பரதநாட்டிய அரங்கேற்றத்தின் தொகுப்பு.**

ஆடற்கலை உலகின் உயர்ந்தகலை. அதனால்தான் ஆடல்கூத்தன் தில்லை நடராஜர் கால்தூக்கி ஆடினாரோ?



இறைவனது திருநடனத்திலேதான் அண்ட சராசரங்கள் இயங்குகின்றன என்பது ஆன்றோர் கண்டறிந்த உண்மை.

எமது தமிழ் மண் நீண்டகால கலைப் பாரம்பரியத்தைக் கொண்டது. பாரதத்தில் தோற்றம் பெற்ற பரதம், இன்று ஈழமண்ணிலே பரவிப் பிரகாசித்து வருகிறது.

பரத நாட்டியம் எமக்குள் இருக்கின்ற ஆத்மாவில் இருந்து துள்ளி எழுகின்ற மகிழ்ச்சிப் பிரவாகத்தின் வெளிப்பாடாகப் பக்தி, பரவசம் ஊட்டுவதாக இருத்தல் சிறந்தது.

எமது மண் நீண்டகாலப் போரினால் சின்னாபின்னப்பட்டுப் போய் இருக்கின்றது. அதனால், எமது கலை, கலாசாரப் பண்பாட்டு விழுமியங்கள் காயப்பட்டிருக்கின்றன.

அதுமட்டுமல்ல தமிழரின் பண்டைய வாழ்வின் மரபுக் கோலங்களை இல்லாதொழிக்க அலலது சிதைக்கப் பேரினவாதிகள் முனைந்து கொண்டிருக்கிறார்கள்.

ஓர் இனத்தினுடைய வாழ்வியல் கோலங்கள் அழிக்கப்பட்டால் அந்த இனம் தானாகவே அழியும். அல்லது மாற்று இனத்தின் பண்பாடுகளோடு ஒட்டிப் பின்னர், அந்த இனத்தின் அடையாளத்தோடு மாற்று இனமாகவே வாழும்.

அந்த நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்க பாரதத்தின் மதுரை நகர்போல யாழ்பாடிய யாழ்ப்பாணத்தில் திரும்பிய இடமெல்லாம் நூல் வெளியீட்டு விழாக்கள், தெய்வீக இசையரங்குகள், மண்ணின் பெருமை பக்தி மணம்பரப்பும் ஒலிநாடா வெளியீடுகள், பரத நாட்டிய அரங்கேற்றங்கள், நாடக ஆற்றுகைகள் இப்படிப் பல நிகழ்வுகள் நடந்துகொண்டிருப்பது மகிழ்வுக்குரிய விடயம்.

அது எம்மை, எமது இனத்தின் தனித்துவ வழியில் கலையின் வழியில் ஒருங்கிணைக்கும் அரிய நிகழ்வு .

இவற்றுக்கெல்லாம் வலுச்சேர்க்கும் வகையில் அண்மையில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நாட்டியக் கலைமணி அகல்யா சுந்தரத்தின் மாணவியும் திரு.திருமதி அரியநாயகம் தம்பதியினரின் புதல்வியுமான செல்வி டயானார்த்தி அரியநாயகத்தின் பரதநாட்டிய அரங்கேற்றம் நடைபெற்றது.

மங்கள விளக்கேற்றல், அரங்க பூஜை இடம்பெற்று, புஷ்பாஞ்சலி என்ற தொடக்க உருப்படியோடு நிகழ்வு ஆரம்பமானது.

ஆரம்பம் முதலே சுவைஞர்கள் கூட்டம் மணடபத்தை நிறைந்திருந்தது. எ.டயானார்த்தியின் ஆடல் கோலங்களை ரசித்து கைதட்டி உற்சாகப்படுத்தினர்.

அடுத்து அலாரிப்பு நடனம் இடம்பெற்றது. இராகமோ, சாகித்தியமோ இன்றி எந்தவித பொருளையும் உணர்த்தி நிற்காது ஜதி அமைப்புக்களைக் கொண்டு கோர்க்கப்பட்டு நர்த்தகியின் உடல் உறுப்புக்களை நிருத்தத்திற்கு தயார் செய்யும் உருப்படி வகையாக 'அலாரிப்பு' திகழ்கிறது.

இது கூப்பிய கரங்களுடன் தெய்வத்திற்கும் குருவிற்கும் சபையோருக்கும் வணக்கம் செலுத்தும் நிகழ்வாகும். இந்த உருப்படிக்கு டயானார்த்தி லாவகமாக நடனம் புரிந்தார்.

இதனைத் தொடர்ந்து நாட்டிய வகையில் சிறப்பு உருப்படியாகக் கருதப்படும் 'வர்ணம்' இடமபெற்றது. யாழ்.பல்கலைக்கழக நுண்கலைப பீட நடனத்துறைத் தலைவர் முதுதத்துவமாணி கிருஷாந்தி ரவீந்திராவின் நடன அமைபபில் இந்த உருப்படிக்கான ஆடல் இடம்பெற்றது.

இந்த வர்ண உருப்படியானது பரதநாட்டிய அரங்கில் நிருத்தத்தையும் அபிநயத்தையும் சமஅளவில் எடுத்துக்காட்டுவது ஆகும்.

ஒரு நர்த்தகிக்கு நாட்டியத்தின் அனைத்துப் பரப்புகளிலும் இருக்கும் ஆழ்ந்த திறமைகளை வெளிக்காட்ட உதவுவது இதுவாகும். பாவங்களினூடாக நவரசங்களையும் வெளிப்படுத்தி நிற்கவல்லது. சாஸ்திரிய இசை நிகழ்வுகளில் இராகம், தாளம், பல்லவிக்கு இணையாக நாட்டிய நிகழ்வுகளில் ஆடப்படுகிறது.

சாஸ்திரியப் பாங்கிலான உருப்படிகளுள் இறைவனையோ இறைவியையோ தன்னிடம் வருமாறு வேண்டிப் புகழ்ந்து வர்ணித்து சஞ்சாரி பாவத்தினூடு வரலாற்றுக் கதைகளை உணர்த்தி நிற்பதாகும்.

இந்த நாட்டிய உருப்படிக்கு எ.டயானார்த்தி ஆடல் புரிந்த விதம் அற்புதமானது. அரங்கத்திலே இருந்த ரசிகர்கள் இதனை மெய்மறந்து ரசித்தனர். தொடர்ந்து 'கீர்த்தனை', 'பதம்', 'தில்லானா', 'மங்களம்' ஆகிய உருப்படிகளுக்கு எ.டயானார்த்தி ஆடல் புரிந்தார்.

இந்தப் பரதநாட்டிய அரங்கேற்ற நிகழ்வு யாழ்.பல்லைக்கழக வணிகத்துறைத் தலைவர் க.தேவராஜா தலைமையில் இடம்பெற்றது.

பிரதம விருந்தினர்களாக யாழ்.மேல்நீதி மன்ற நீதிபதி கே.பி.எஸ்.வரதராசாவும் சிறப்பு விருந்தினர்களாக கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன், சுண்டிக்குளி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி தே.இராஜரட்ணம், யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கழக நடனத்துறைத் தலைவர் திருமதி கிருஷாந்தி இரவீந்திரா ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றி நிகழ்வை சிறப்பித்தனர்.

அரங்க அணிசெய் கலைஞர்களாக நட்டுவாங்கம் - நாட்டியக் கலைமணி செல்வி அகல்யா சுந்தரம், வாய்ப்பாட்டு இசைக் கலைமணி திரும்தி சுகந்தி ரட்ணேஸ்வரன், ம.தயாபரன், மிருதங்கம் லயஞான வாரிதி சி.மகேந்திரன், வயலின் இசைக்கலைமணி கா.குகபரன், புல்லாங்குழல் ரா.வசந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஒப்பனை, உடையமைப்பை முறையே திருமதி யோகிணி சண்முகநாதன், தாயாளினி பஞ்சலிங்கம் அகியோர் வழங்கினர். ☆

**எம்.பிருந்தா**



**கரைச்சிப்பிரதேச சபையின் உள்ளூராட்சிவார இறுதிநாள் நிகழ்வு அண்மையின் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.**

**அதில் வட்டக்கச்சி மகாவித்தியாலய மாணவர்களால் மேடையேற்றப்பட்ட 'பாஞ்சாலி சபதம்' எனும் நாட்டிய நாடகத்தின் ஒரு காட்சி.** *(படம் வட்டக்கச்சிச் செய்தியாளர்).*

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

HI 6 XXX தொடர் இலக்கமுடைய குவாட்டா லான்மாஸ்ரர் விற்பனைக்குண்டு. தொடர்பு: K.பத்ம நாதன், டச்சுறோட், மானிப்பாய் (மருதடி விநாய கர் சனசமூக நிலையத்திற்கு அருகில்).(35387)

ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட தொலைக்காட்சிப் பெட்டிகள், VCRகள், சலவை இயந்திரங்கள், VCD Players, அம்பிளிபயர்கள், கொம்பியூட்டர்கள், அதன் உதிரிப்பாகங்கள் மிகவும் மலிவான விலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 024.2224402, 0776309910, 0773039649. (36592)

## கோழிக்குஞ்சு விநியோகம்

மிகவும் தரமான, தடுப்பு மருந்து ஏற்றப்பட்ட Prima Broilers குஞ்சுகள் 35/=, prima பேட்டுக் குஞ்சுகள் 50/=. 27.09.2004 திங்கட்கிழமை விநியோகிக்கப்படும். அத்துடன், Original Prima கோழித்தீன்கள் விலைக் கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: நல்லூர் பாம சென்ரர், பிரதான வீதி, நெல்லியடி. (36572)

மிகவும் தரமான, இரண்டு முறை தடுப்பு மருந்து வழங்கப்பட்ட Prima Original Broiler குஞ்சுகள் 35/=, பேட்டுக் குஞ்சுகள் 50/=. 27.09.2004 திங்கட்கிழமை விநியோகிக்கப் படும். பருத்தித்துறை - நெல்லியடிக் கிளை யிலும், சூட்டி பாம், வட்டுக்கோட்டை, R.S.K. பாம், உடுவில் - சுன்னாகம், ஐங்கரன் திரு நெல்வேலி, முருகன் சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர், 19,முருகேசர் ஒழுங்கை, யாழ்ப் பாணம். (36573)

## மணமகள் தேவை

பிரான்ஸில் பிரஜாவுரிமை பெற்று, அங்கு அரசதொழில் புரியும், 1973 இல் பிறந்த, கௌரவ குடும்ப மணமகனுக்கு, ஓரளவு படித்த, அழகிய பெண் தேவை. மணமகன் இங்கு வந்து திருமணம் செய்யவுள்ளார்.

தொடர்புகளுக்கு:
T.பாலச்சந்திரன்,
021 222 2923
(36625)(39-14-44-24)

## தேவை

தொலைத்தொடர்பு நிலையத்திற்குத் தொலை பேசி இயக்கக்கூடியவர்களும், கணனி அனுபவம் உள்ளவர்களும் தேவை.

தொடர்பு: G.M.K.Communication
302,Temple Rd., Nallur, Jaffna.
T.P.: 021-2223760, 021-4591194
(36651)(39-14-44-24)

## இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் வளர்க்கப்பட்ட, சுத்தம் செய் யப்பட்ட பிறீமா, புறோயிலர் இறைச்சிக் கோழிகள் (ஐஸ்) விற்பனைக்குண்டு. தினமும் காலை மேணி முதல் இரவு 10 மணிவரை நியாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு: T.கரன்
முட்டை விற்பனை நிலையம்
(36560) 150, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (14-44-24)

## இணைய, இணையத்தள சேவை

.com .net .org .info
Domian Registration Rs.400/= per Year
Hosting upto Rs.2000/= per year
Limited time offer
SAAMSTECH, 841, Hospital Road, Jaffna.
T.P.: 0773 068968 (சி-37510)

## SAAMSTECH இன் ஆங்கில, சிங்கள நேரடி வகுப்பு

காலம்: 2 மாதங்கள்
கட்டணம்: ஆங்கிலம் ரூபா 6000, சிங்களம் ரூ.4000/= முழுமையாகக் கதைக்கலாம்.
SAAMSTECH
841, Hospital Rd., Jaffna.
Phone: 077 3068968
(சி-37511) (14-44-24)

## மணமகன் தேவை

யாழ். கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1965இல் பிறந்த, அத்தம் நட்சத்திரம், உதயச் செவ்வாய், ஆசிரியைக்கு (B.A.Dip.in.Edu.) பொருத்தமான மணமகன் தேவை. தொடர்பு: விளம்பர இலக்கம் 2383, மே/பா உதயன். (36598)

ஆஸ்திரேலியாவுக்கும், லண்டனுக்கும் 30 வயதுக்கு மேற்பட்ட, தகுதியான, உயர்தர மண மகன் தேவை. இலங்கையில் விவாகம் செய்து பொன்சரில் அழைக்கப்படும். சாதகம், தராதரம் அனுப்பவும். பொருத்தமானது நேரில் தொடர்பு கொள்ளப்படும். தொடர்பு: சு.சிவஷண்முகானந் தக்குருக்கள், கொல்லங்கலட்டி, தெல்லிப் பழை. (36466)

யாழ். கௌரவ R.C. 5'4", 1973இல் பிறந்த, புணர்பூசம், செவ்வாய்க்குற்றமற்ற, தாதித்தொழில் செய்யும் பெண்ணிற்கு மணமகன் தேவை. உள் / வெளிநாட்டில் உள்ளோரும் ஏனைய சமயத்தினரும் விண்ணப்பிக்கலாம். தொடர்பு: விள. இல. 2380, மே/பா உதயன். (36489)

## தவறிவிட்டது

சாட்டி மாதா கோயிலிலிருந்து யாழ்ப்பாணம நோக்கி வந்துகொண்டிருந்த இ.போ.சபை பஸ் ஸில் பெ.அன்ரனி நவஜோதி (690821087V), அ.கிறிஸ்ரபெல் (716963454V), வி.அ.அட்டை (0901020272) என்பவர்களது தேசிய அடையாள அட்டைகள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 36A, பீச் றோட், குருநகர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் தொடர்புகொள்ளவும். T.P.: 2577 (36649)

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம்: 07 - 03 - 1934



மறைவு: 17 - 09 - 2004

எமது முன்னாள் நிர்வாக சபை உறுப்பினரும், முன்னாள் யாழ். வணிகர் கழகத் தலைவரும், தற்போதைய யாழ். வணிகர் கழக உப செயலாளருமாகிய

**க.வி.குலரத்தினம் J.P.**

அவர்களின் மறைவைக் கேள்வியுற்று துயரமடை கின்றோம். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரி வித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.மாவட்ட வர்த்தக சங்கங்களின் சம்மேளனம்.
(சி37712)(43-14-44-24)

## 28ஆவது ஆண்டு நினைவஞ்சலி

30 - 05 - 1914



30 - 08 - 1976

**இ.செல்லையா** அவர்கள்
(ஸ்தாபகர் சன்லைற் றைக்கிளீர்ஸ், யாழ்ப்பாணம்)

அன்போடும் பண்போடும்
எம்மை வளர்த்து ஆளாக்கினீர்!
எம் பாசமிகு தந்தையே!
ஆண்டுகள் இருபத்தியெட்டு ஆனாலும்
நாம் வாழும் வரை
எம் உயிருடன் கலந்திருப்பீர்!

30/2, மருதடி லேன், நல்லூர், யாழ்ப்பாணம். (36608) (24-14-44)
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

# நாகர்கோயில் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்தோருக்கு வீடு

## அமைத்துக் கொடுக்க யு.என்.எச்.சி.ஆர்.திட்டம்

செம்பியன்பற்று,செப்.20

வடமராட்சி கிழக்கு, நாகர்கோயில் பகுதி யிலிருந்து இடம்பெயர்ந்து பருத்தித்துறைப் பகுதியில் அகதி முகாம்களில் வாழும் மக் களுக்கு இருப்பிடவசதிகளைச் செய்துகொடுகக அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் நிறுவனம் முன்வந்துள்ளது.

இடம்பெயர்ந்த மக்கள் - அகதிகள் முகாம் களில் வாழும் மக்கள் - அடிப்படை வசதிக ளின்றி படும் இன்னல்களைக் கவனத்திற் கொண்டே இவ்விருப்பிட வசதிகளைச் செய்து கொடுக்கத் தீர்மானித்ததாகவும், இதற்காக 28 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா கவும் தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறை லூர்த்துமாதா கோயில் முகாம், தும்பளை இலட்சுமணன் தோட்ட முகாம் மற்றும் கற்கோவளம் அகதிகள் முகாம் போன்றவற்றில் வாழும் குடும்பங் களுக்கே கற்கோவளம் புனித நகரில் வீட மைப்புத் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள் ளன என்பது குறிப்பிடத்தக்கது. (4-36)

## இந்துவிழிப்புணர்வுப் போட்டியில் வசாவிளான் ம.வி.முதலிடம்

வலிகாமம்தெற்கு,செப்.20

இலங்கை சின்மயா மடாலயம் தமது வெள்ளிவிழாவை முன்னிட்டு மாவட்ட ரீதியில் நடத்திய இந்துவிழிப்புவாரப் போட்டிகளில் வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம் முத லாம் இடத்தைப்பெற்று முதற்பரிசாகிய 20 ஆயிரம் ரூபாவைப் பெற்றுக்கொண்டது. இரண் டாம் இடத்தைத் தெல்லிப்பழை யூனியன் கல் லூரியும் மூன்றாம் இடத்தை யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையும் பெற்று முறையே 10ஆயிரம் ரூபா, 5ஆயிரம் ரூபா என்பவற்றைப் பெற்றுக்கொண்டன.

இவர்களுக்கான வெற்றிக்கேடயங்களும் வழங்கப்பட்டன.(4-152)

## தோட்டங்களில் கால்நடைகள் தொல்லை!

அரியாலை,செப்.20

நீர்வேலி தெற் குப் பகுதியில் மக் கள் கால்நடைகளை அவிட்டு விடுவதால் கால்நடைகள் தோட் டங்களில் சென்று அங்கு பயிரிடப்பட்டி ருக்கும் விளைபயிர் களை மேய்ந்து சேதப்படுத்துவதாக விவசாயிகள் கவலை தெரிவிக் கின்றனர். (4-17)

## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா,
வாதநோய்கள், வலிப்பு நோய், பீனிசம்,
தலையிடி, தலைகால் அவியல்,
சருமநோய்கள், மாதவிடாய்க்குத்து,
இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு,
கருவழிதல், மகப்பேறின்மை,
குழந்தை வைத்தியம், வீரியக்குறைவு,
மூலவியாதிகள், மூத்திரரோகங்களில்
பிரபல்யமானவர்.
சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்:

வேலணை வைத்திய கலாநிதி
**சி.இராசரத்தினம்**
121, 2ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண் : 222 2459
(36120)

## 31ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்: 12 - 07 - 1946



மறைவு: 21 - 08 - 2004

### அமரர் கந்தன் கணேசன்

முப்பத்தொரு நாளானாலும் முகம் மறைந்து போகுமா?
எப்போது நினைத்தாலும் திருமுகமே கண்முன் வருகிறது!
இப்போது இந்நாளில் ஆத்மா சாந்திபெற வேண்டி
முப்போதும் ஆண்டவனை இறைஞ்சி வணங்குகின்றோம்!

இன்று (20.09.2004) திங்கட்கிழமை நடைபெறுகின்ற அந்தி யேட்டி நிகழ்வில் கலந்துகொள்வதோடு, மதியபோசனத்திலும் கலந்து ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு உற்றார், உற வினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குமரநகர்,
கைதடி மத்தி,
கைதடி.

குடும்பத்தினர்,
மனைவி - பொன்னி
மருமகன் - மனோகரன் (லண்டன்).
(36057) (42-14-44-24)

## மரண அறிவித்தல்

### எலியாஸ் ஜெயராஜா
(பிரபல கட்டட ஒப்பந்தகாரர்)



யாழ்ப்பாணம், நல்லூர், மருதடி வீதியை வசிப்பிடமாகக் கொண்ட பிரபல கட்டட ஒப் பந்தகாரரான எலியாஸ் ஜெயராஜா அவர்கள் கடந்த 13.09.2004 திங்கட்கிழமை கொழும்பில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற எலியாஸ் - ஞானம்மா தம்பதிகளின் அன்பு மகனும் திருமதி இராஜேஸ்வரியின் அன்புக் கண வரும், ஜெயந்தினி (ஆஸ்திரேலியா), டியோனி, சாமினி, அன்றூ ஆகியோரின் பாசம்மிகுந்த தந்தையும் அன்ரனி கிப்போலிற்றா, T.K.அன்ரனி (கனி ரீச்சர் - லண்டன்), எலியாஸ் ஜீவ் ராஜா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஜோன்சன் (ஆஸ்திரே லியா), ஜஸ்ரின் (Euro and west Ceylinco Company), உயி ரோவியம் (ஆசிரியர், சென்ஜோன்ஸ் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஷெகான், ஜெசிக்கா ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.09.2004) திங்கட் கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெற்று, புனித திரேசாள் ஆலயத்தில் நல்லடக்கத் திருப்பலி நடைபெற்று, பூதவுடல் நல்ல டக்கத்திற்காகக் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

2/1, மருதடி லேன்,
நல்லூர், யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 2452

தகவல்:
அன்றூ (மகன்).
(36603) (26-14-44-24)

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணம் வணிகர் கழக மூத்த உறுப்பினரும்
முன்னாள் தலைவரும் யாழ்ப்பாணம்
லிங்கம் ஸ்ரோர்ஸ் உரிமையாளருமாகிய

**விஸ்வலிங்கம் குலரத்தினம் J.P.**

அவர்கள் 17-09-2004 அன்று இயற்கையெய்தியதையிட்டு நாம் மிகவும் மனம் வருந்துகின்றோம். அவரது நேர்மையும், சேவைத்திறனும் சொல்லில் அடங்காதவை. அவரது இழப்பு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, ஆத்மா சாந்தியடைய நல்லைக் கந்தனின் பாதாரவிந்தங்களைத் தொழுகின்றோம்.

**வாமாஸ்**
56/7, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

உரிமையாளரும்,
ஊழியர்களும்.
(36652) (26)

# புதுமைகளையும் கையாளப் பழகிக் கொள்வோம்



## கடற் புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை

எமது மக்கள் இன்றும் பழைமைகளிலேயே நாட்டம் கொண்டுள்ளனர். அதைவிடுத்து புதுமைகளையும் கையாளப் பழகிக்கொள்ள வேண்டும். இதனூடாக எமது தேசத்தின் பெருமையையும் மதிப்பையும் காப்பது ஒவ்வொருவரதும் கடமையாகும்.

- இவ்வாறு வடமராட்சி கிழக்கு (மருதங்கேணி) பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தை மருதங்கேணியில் திறந்துவைத்து சிறப்புரையாற்றிய கடற் புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை கூறினார்.

சங்கத் தலைவர் எஸ். யோகராசா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பொதுச்சுடரினை யாழ். மாவட்டப் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர் எஸ். தவராசா ஏற்றிவைக்க, தேசியக்கொடியினை கடற்கரும் புலிகளின் வடமராட்சி கிழக்குப் பொறுப்பாளர் புகழேந்தி ஏற்றிவைத்தார். சங்கத்தின் பெயர்ப்பலகையை கடற் புலிகளின் தளபதி லெப்டினன்ட் கேணல் மங்களேஸ திரைநீக்கம் செய்துவைக்க, கடற் புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை கட்டடத்தை நாடா வெட்டித் திறந்துவைத்தார்.

சிறப்புத் தளபதி கேணல் சூசை மேலும் பேசுகையில்:-

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை மக்கள் சிறப்பாக வாழ்ந்தால்தான் எமது போராட்டத்தினுடைய இலக்கை அடைவதற்கு மிகவும் இலகுவாக இருக்கும். எமது போராட்டத்தின் ஆரம்பகாலங்களில் குறிப்பாக, 1984ஆம் ஆண்டு வடமராட்சி கிழக்குச் செயற்பாடுகளும் போராட்டத்துடன் மிகநெருக்கமாகப் பின்னிப் பிணைநது காணப்பட்டது. அந்தளவுக்கு எமது செயற்பாட்டைச் செய்வதற்கு இப்பகுதி மக்கள் அனைவரும் தமது ஒத்துழைப்பை வழங்கினார்கள்.

வடமராட்சி கிழக்கை இராணுவப் பிடியிலிருந்து மீட்டபின்னர் இப்பகுதியைப் படிப்படியாகக் கட்டியெழுப்பக்கூடிய எங்களாலான உதவிகளைச் செய்துவருகிறோம்.

அத்துடன் இப்பகுதியை அபிவிருத்தி செய்ய வேண்டுமானால் இங்கு வருகின்ற அதிகாரிகளையும் அணுகி உதவிகளைப்பெற முயற்சி செய்யவேண்டும் என்றார்.

புதிதாகத் திறக்கப்பட்ட இச்சங்கத்தின் வளர்ச்சிக்காக கடற் புலிகளின் தளபதி மங்களேஸ் இரண்டு லட்சம் ரூபா பணத்தை சங்கத்திற்கு அன்பளிப்புச் செய்தார். (ப-173-182)

# தமிழர் தம் உரிமைகளைப் போராடியே பெறவேண்டும்

யாழ்ப்பாணம்,செப்.20

தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை மதித்து அமைதிவழியில் தமிழரின் பிரச்சினையைச் சிங்களப் பேரினவாதிகள் தீர்த்து வைப்பார்கள் என்று நம்பமுடியுமா? இல்லை... இது எமது மக்களின் வரலாற்றுப் பட்டறிவாகும். தமிழர்கள் தம் விடுதலையைத் தாமே பெறவேண்டும். எந்தக் கட்சி ஆட்சி அமைத்தாலும் சிங்கள ஆட்சியாளர்கள் சும்மா கொடுக்க மாட்டார்கள். போராடி எடுத்தல் என்ற செய்கை தமிழினத்தின் இராணுவ, அரசியல் பலத்திலேயே தங்கியுள்ளது.

அந்தப் பலம்தான் எமக்கு நிரந்தர நிம்மதியான விடுதலையைப் பெற்றுத்தரவல்லது. அந்தப் பலத்தின்பால் மக்களைக் கொதிநிலையில் வைத்திருக்கவேண்டியது மக்களின் உயர் கட்டுமானமாகிய தேசிய எழுச்சிப் பேரவையின் கடமையாகும். அந்தக் கடமையைப் புரிகின்ற நீங்கள் மக்கள் மத்தியில் பெறுமதிமிக்கவர்கள்; பெருமைக்குரியவர்கள். இது உங்களது தேசிய கடமையாகும். ஏனென்றால் தமிழீழ மக்களின் அரசியல் வேணவாவை நிறைவேற்ற உழைக்கும் எங்கள் தேசியத் தலைவரின் வழிகாட்டலில் அனைத்துத் தமிழீழ மக்களை ஒன்றிணைக்கிற மையமே தேசிய எழுச்சிப் பேரவையாகும் என்றார்.

- இவ்வாறு வடமராட்சிக் கோட்டத் தேசிய எழுச்சிப் பேரவையின் மாதாந்த சங்கம நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையில் தேசிய எழுச்சிப் பேரவையின் மாவட்டச் செயலாளர் சூ.சிறில் கூறினார்.



மாவட்டப் பொருளாளர் க.சிவராசா அங்கு உரையாற்றுகையில், தேசியத் தலைவரின் வழிகாட்டலில் உதயமாகிய தேசிய எழுச்சிப்பேரவையானது முதலில் தேசியத்திற்கும், தேசத்திற்கும் தனது சேவையை முன்னிலைப்படுத்த வேண்டும். விடுதலைதான் எமக்குவேண்டும். விடுதலையின் பின்பு அபிவிருத்தி தானே எம்மை நாடித் தேடிவரும். அதற்காக நாம் கடுமையாக உழைக்க வேண்டும் என்றார்.

மேற்படி நிகழ்வு அண்மையில் பருத்தித்துறை வேலாயுத மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் தேசிய எழுச்சிப்பேரவையின் மாவட்ட செயற்குகுழு உறுப்பினர் சி.கணபதிப்பிளை தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பொதுச்சுடரை பிரதேச உறுப்பினராகிய இ.செவ்வந்திநாதன், அ.தர்மலிங்கம், அ.கிருஷ்ணசிவம், து.சத்தியசீலன் ஆகியோர் ஏற்றிவைத்தனர். மாவீரர் திருவுருவப்படத்திற்கான ஈகச் சுடரினை மாவீரர்கள் கப்டன் லீமா, கேணல் அருணா ஆகியோரின் தந்தை செல்லையா இராசேந்திரம் ஏற்றிவைத்து மலர்மாலை அணிவித்தார். (ப)

# வாழும்முறையால் சைவத்தை வெளிப்படுத்த வேண்டும்

## நல்லை முதல்வர் அருளுரை



சமயம் என்பது வாழ்வதற்கு மட்டுமே. பேசுவதற்கல்ல. எனவே, ஒவ்வொரு சைவரும் சமயத்தை தம் வாழ்வின் ஊடாகப் பின்பற்றவேணடும்.

இவ்வாறு தெரிவித்தார் நல்லை ஆதீன முதலவர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.

வண்ணை நாவலா வித்தியாலயத்தில இடம்பெற்ற அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் 44 ஆவது ஆண்டு நிறைவு விழாவின் சைவப் புலவர் பட்டமளிப்பு நிகழ்வில் அருளாசி அளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் உரையாற்றும் போது:-

சைவப்புலவர்கள் ஒவ்வொருவரும் உருவாகும் செய்தி இந்த மண்ணில் இடம்பெறுவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். பட்டம் பெறும் ஒவ்வொரு சைவப்புலவர்களும் தம்வாழ்வில் சைவத்தை வாழ்ந்துகாட்டவேண்டும்.

ஏனைய நிகழ்வைவிட சமய நிகழ்வுகளில் கலந்து கொள்வோர் தொகை தற்போது குறைந்து கொண்டே செல்கின்றது. இந்த நிலை தொடர்ந்தால் சமய வாழ்வு வாழும் சமுதாயம் என்பது கேள்விக்குறியாகிவிடும்.

சைவப்புலவர் பட்டம் பெறும் ஒவ்வொருவரும் சைவத்தை மேன்மை பெறச் செய்யவேண்டும். உழைக்க வேண்டும் கற்றல் மட்டுமே சைவத்தை வாழ வைக்காது. இந்தத் துறையினூடாக சமய வாழ்வை நெறிப்படுத்தவேண்டும்.

ஒரு நிகழ்வில் சைவசமய ஆசிரியர் ஒருவா தேவாரம் பாடும்போது அவர் காற்சட்டை அணிந்து கொண்டு பாடுகின்றார். சைவ அனுஷ்டானங்களை இன்று அதைக் கற்பிக்கின்ற ஆசிரியர்கள்கூட கடைப்பிடிப்பதில்லை.

எமது சமய நிகழ்வுகளிலேனும் சைவ அனுஷ்டானப்படி உடைகள் அணிவது முக்கியம். எமது ஆடை அலங்காரங்கள் எமது உள்ளங்களை வெளிப்படுத்துவதாக அமைய வேண்டும்.

எமது சமயம் வாழவேண்டும். சமய வாழ்வு முறையை முன்னெடுக்க வேண்டும். அதற்கு ஒவ்வொரு சைவப்புலவர்களும் தம்பணியை உவந்தளிக்கவேண்டும்.

சமுதாய சிந்தனை மாறுபட்டுக் கொண்டிருக்கும் இக்காலத்தில் சைவப் புலவர்களின் வாழ்வு சைவத்தின் சுயத்தை வாழ வைக்க வேண்டும் இதன் மூலம் எமது சமுதாயமும் சமயத்தில் வளரத் துணை நிற்கவேண்டும் - என்றார்.

இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் பட்டங்கள் வழங்கிக் கௌரவித்தார்.(202-204)




# நம்பிக்கை ஏற்படும் வகையில் அலுவலர்கள் நடந்துகொள்க

## அரச அதிபர் அறிவுரை

கொக்குவில்,செப்.20

பொதுமக்களுடனான தொடர்புகள், எப்போதும் சுமுகமானதாகவும், அலுவலர்கள் மீது அவர்கட்கு நம்பிகையும் அபிமானமும் ஏற்படக் கூடியவாறும் அமையவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன்.

பிரதேச செயலர்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர்களுக்கிடையிலான கூட்டம் அண்மையில் மாவட்டச் செயலகத்தில் யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பேசிய அவர்,

பொதுமக்களுடனான தொடர்புகள் எப்பொழுதும் சுமுகமானதாக அமைவதற்கு அரச அலுவலர்களும் அதிகாரிகளும் ஒழுங்காக அலுவலகத்திற்கு சமுகமளிப்பதுடன், பொதுமக்களின் தேவைகளைத் தட்டிக்கழிக்காமலும் காலங் கடத்தாமலும் நிறைவேற்றிக் கொடுப்பது அவசியமாகும். எதிர்காலத்தில் அவ்வாறு செயற்படுவதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார்.

மாவட்டத்தில் ஆயிரத்து 601 குடும்பங்களுக்கு காணி சொந்தமாக இல்லாத காரணத்தினால் இதுவரை மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை என்றும் இவ்வாறான குடும்பங்கள் தற்போது மீளக்குடியமர்ந்துள்ள இடத்தில் நீண்டகாலமாக வாழ்ந்து இடம் பெயர்ந்து பின் மீளவும் அவ்விடத்தில் குடியமர்ந்திருந்தால் குறிப்பாக 8 வருடங்கள் வாழ்ந்திருந்தால் அதனை உறுதிப்படுத்தி மீளக்குடியமர்வுக் கொடுப்பனவை வழங்கலாம் என அரச அதிபர் தெரிவிதத்தார்.



கிராமிய அபிவிருத்தித் திட்டத்திற்கான சமுர்த்தி அதிகார சபையினால் ரூபா 28 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான மதிப்பீடுகள் பிரதேச செயலர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளன. இதற்கான அனுமதி வழங்கப்பட்டதும். வேலைகள் நடைமுறைப்படுத்தப்படும் என்று கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சங்கானை, சாவகச்சேரி, கோப்பாய், பருத்தித்துறைப் பிரதேசசெயலர் பிரிவுகளில் சமுர்த்தி வங்கிச்சங்கக் கட்டடம் செயற்படுத்தப் படுவதற்கான அனுமதிகிடைக்கப் பெற்றுள்ளதாவும் இவ்வேலைகளை இவ்வருட இறுதிக்குள் முடித்து வைக்கப்படும் என்றும் அரச அதிபர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் பிரதேச செயலர்கள், உதவி அரசாங்க அதிபர்கள், திட்டப் பணிப்பாளர், மேலதிக அரசாங்க அதிபர், உதவித் திட்டப் பணிப்பாளர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ப.76)

# செய்திக் கொத்து

### வலி. தென்மேற்கில் வாக்காளர்கள் பதிவு

வலி.தென்மெற்கு,செப்.20

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகப் பிரிவில் 18 வயதை அடைந்த இளைஞர், யுவதிகளை வாக்காளர்களாகப் பதிவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

18வயதினை அடைந்தவர்கள் தத்தமது பிரிவு கிராம அலுவலருடன் தொடர்பு கொண்டு இதற்கான விண்ணப்பப் படிவத்தைப பெற்று நிரப்பி கையளிக்கமுடியும் என்று பிரதேச செயலர் ஆ.சுப்பிரமணிய சர்மா தெரிவித்தார். (4-135)

### காலபோகச் செய்கைக்கு விதைநெல்

தென்மராட்சி,செப்.20

சாவகச்சேரி வடக்குப் பிரிவு நெற்செய்கையாளர்களுக்கு காலபோக நெற்செய்கைக்கான விதைநெல் வழங்கப்படவுள்ளது.

விதைநெல் தேவைப்படும் நெற்செய்கையாளர்கள் தமது விவரங்களைப் பதிவு செய்யுமாறு சாவகச்சேரி வடக்கு விவசாய சம்மேளனத் தலைவர் ந.நல்லதம்பி அறிவிததுள்ளார்.

அத்துடன், இப்பகுதியில் காலபோக நெற்செய்கை மற்றும் மேட்டு நிலப்பயிர்ச் செய்கை என்பன மேற்கொள்ளப்பட்டு வருவதால் மக்கள் தமது கால்நடைகளைக் கட்டி வளர்க்க வேண்டும் என்றும் அறிவித்துள்ளார். (4-117)

### கோப்பாய்ப் பிரிவில் சுகாதார நிலையங்கள்

கோப்பாய்,செப்.20

கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் ஊரெழு, சிறுப்பிட்டி மேற்கு ஆகிய இடங்களில் ஜி.ரி.இசற். நிறுவன அனுசரணையோடு ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

இதற்கான ஆரம்பக் கட்டப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளதாக கோப்பாய்ப் பிரதேச செயலகத் திட்டமிடல் பணிப்பாளர் ஆ.சுதிரமலைநாதன் தெரிவித்துள்ளார். (4-72)

### விவசாய உபகரணங்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,செப்.20

அல்லைப்பிட்டி கியூடெக் விவசாயக் குழுவினருக்கு அண்மையில் யாழ். மறைமாவட்ட மனித முன்னேற்ற நடுநிலையத்தினரால் விவசாய ஊக்குவிப்பிற்காக நீரிறைக்கும் இயந்திரம், மண்வெட்டி, தெளிகருவி போன்ற உபகரணங்கள் வழங்கப்பட்டன. (4)

### டெங்கு ஒழிப்புக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,செப்.20

யாழ்ப்பாணம், பெரியகடை மாதர் அபிவிருத்திச் சங்கத்தால் 'டெங்கு ஒழிப்பு' கருத்தரங்கு ஒன்று கடந்த 2ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் கன்னாதிட்டி சயன்ஸ் ஹோலில் தலைவி திருமதி இந்திராணி தங்கராசா தலைமையில் நடத்தப்பட்டது.

இதில் ஜே/80 கிராமசேவையாளர் எம்.ஆர். கேரட்ணராஜா, கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி மாலினி, சுகாதாரக் கல்வி அதிகாரி கு.சிவலிங்கம், குடும்பநல உத்தியோகத்தர் திருமதி இ.பரஞ்சோதி மற்றும் சங்க அங்கத்தவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (4)

### தென்மராட்சி வலய தொண்டர் ஆசிரியருக்கு

தென்மராட்சி,செப்.20

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் 1998ஆம் ஆண்டு தொடக்கம் தொண்டர் ஆசிரியர்களாகத் தொடர்ந்து பணிபுரிவோரின் விவரங்கள் வலயக் கல்விப் பணிமனையினால் திரட்டப்படுகின்றன.

தொண்டர் ஆசிரியர்களாகப் பணிபுரிவோர் தமது பெயர், கற்பிக்கும் பாடசாலை, கல்வித் தகைமை, கற்பிக்கும் பாடங்கள், பாடசாலையில் இணைந்த திகதி, கல்வித் திணைக்களத்தினால் அனுமதி வழங்கப்பட்டமை ஆகிய விவரங்களுடன் நாளை செவ்வாய்க்கிழமை வலயக் கல்வி அலுவலகத்திற்கு சமுகமளிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (4-117)

### கைதடி, நாவற்குழி பாலங்கள் புனரமைப்பு

சாவகச்சேரி,செப்.20

தென்மராட்சிப் பிரதேசத்தில் இராணுவ நடவடிக்கைகளால் சேதமடைந்து தற்காலிகமாகப் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ள கைதடி, நாவற்குழி பாலங்கள் மீளப்புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இதற்காக ஒவ்வொரு பாலத்திற்கும் 50 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக கைதடிப் பாலம் புனரமைப்புச் செய்வதற்கு வசதியாகத் தற்காலிகப் பாதை - பாலத்தின் வடக்குப் பக்கமாக துரிதமாக அமைக்கப்பட்டுவருகிறது. (4-31)

# அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் வருகை

இலங்கையில் வசிக்கும் அமெரிக்கப் பிரஜைகளைச் சந்திப்பதற்காக அமெரிக்கத் தூதரக அதிகரிகள் இன்று யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளனர்.

யாழ். குடாநாட்டில் வசிக்கும் அமெரிக்கப் பிரஜைகள் தமது அமெரிக்கக் கடவுச் சீட்டைக் காட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் யாழ்.பாடி ஹோட்டலில் நடைபெறவுள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் சந்திப்பில் பங்குகொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. அமெரிக்கப் பிரஜைகளை மட்டுமன்றி அரச அதிகாரிகளையும் இவர்கள் சந்தித்துக் கலந்துரையாடுவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-204)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 22 - 09 - 1954 | 22 - 08 - 2004 |

### திருமதி ஜெகதீஸ்வரி தவபாலசிங்கம்

கடந்த 22.08.2004 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி திருமதி ஜெகதீஸ்வரி தவபாலசிங்கம் அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் தொடர்ந்து மதியபோசனமும் 20.09.2004 திங்கட்கிழமை நடைபெறும். இவ்வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*Present Address*:
21/9, 1st Main Road,
Ganesh Nagar, Madipakkam. Ch-91.
**Tel.: 22471979**
K.Ambigai Balan
Old Police Station Road,
Chunnakam South,
Chunnakam. Tel.: 071 2524546

*Permanent Address*:
V.C.Road, Myliddy, K.K.S.
Srilanka.
**Tel.: 071 2524546**
**பிள்ளைகள், மருமக்கள், தகப்பன், சகோதரர்கள், மச்சான்மார்கள், மச்சாள்.**

(36666)(24-11-45-43)

## மரண அறிவித்தல்

### கார்த்திகேசு தில்லைநாதன்

**(ஓய்வு பெற்ற கிராம சேவகர்)**



புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் உருத்திரா, மாவத்தை வெள்ளவத்தையை தற்போதைய வசிப்பிடமாகக் கொணடவருமான கார்த்திகேசு தில்லைநாதன் அவர்கள் 18.09.2004 சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் பரஞானவதியின் அன்புக் கணவரும் முகுந்தன் (பிரான்ஸ்), அருளானந்தன் (சுவிஸ்), இராகவன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கனகாம்பிகை காலஞ்சென்றவரான துரைசிங்கம் மற்றும் சொர்ணலட்சுமி ஆகியோரின் சகோதரனும் சிவஞானவதி, சிவானந்தபாலன் ஆகியோரின் மைத்துனரும் கிரிஜா, குமுதினி ஆகியோரின் மாமனாரும் மதுஷன், அபிஷேக் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.09.2004) செவ்வாயக்கிழமை ஜெயரட்ண மலர்ச்சாலை, கொழுமபு - 08 இல் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கனத்தை இந்து பொதுமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

*9, 1/3A உருத்திராமாவத்தை,*
*வெள்ளவத்தை.*
*T.P: 0777 068673*

தகவல்:
திருமதி பரஞானவதி
(மனைவி).

(36667)(24-11-45-43)


BROWNS Electronics
விரையுங்கள்
வாங்க வாங்க
மாபெரும் தள்ளுபடி



உங்களது பழைய குளிர்சாதனப் பெட்டிகளை ஒப்படைத்து புத்தம்புதிய இத்தாலிய தொழில்நுட்பத்துடன் கூடிய ELBA

அதி நவீன உறைபனியற்ற (No Frost) குளிர்சாதனப் பெட்டிகளை 5000/= விலைக் குறைப்புடன் 5 வருட உத்தரவாதத்தில் பெற்றுக்கொள்ளுங்கள்.

SHARP-ELBA Sumeet-Cornel-Rico

BROWNS GROUP BG ESTD 1875

பிறவுண்ஸ்
இல: 89,ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 - 2225150


## வீதி பலத்தசேதம்

யாழ்ப்பாணம்,செப்.20

கொழும்புத்துறை வளம்புரத்திற்குச் செல்லும் வீதி பலத்த சேதமடைந்த நிலையில் 10 வருட காலமாக திருத்தப்படாமல் கவனிப்பாரற்றுக் காணப்படுகிறது.

இவ் வீதியால் பயணிக்கும் பொதுமக்கள் அடிக்கடி விபத்துக்குள்ளாகி வருகின்றனர். அத்தோடு இந்த வீதியால் இரவில் பொது மக்கள் பயணஞ் செய்யமுடியாதவாறு சிரமப் படுகின்றனர். உரியவர்கள் இந்த வீதியை கவனத்தில் எடுத்து மழைகாலத்திற்கு முனபாகச் செப்பனிட்டுத் தருமாறு அப்பகுதி வாழ்கின்ற மக்கள் சம்பந்தப்பட்டவர்களிடம் கேட்டுள்ளனர். (4-190)

## மின் விளக்குகள் இல்லை; வீதிகள் இருளில்

அரியாலை,செப்.20

நீர்வேலி கந்தசுவாமி கோயில் சுற்றாடல் பகுதியிலுள்ள வீதிகளுக்கு மின்சார விளக்குகள் அமைக்கப்படாததினால் இப்பகுதி இரவு நேரங்களில் இருளில் மூழ்கிக் காணப்படுகின்றது.

ஆலயத்தைச் சுற்றியுள்ள வீதிகளிலிருந்த மின்சார விளக்குகளை விஷமிகள் சேதப்படுத்தி திருட்டு முயற்சிகளில் ஈடுபட்டதனால் இப் பகுதி இரவு நேரங்களில் இருளில் மூழ்கிக் காணப்படுவதாகக் கூறப்பட்டது.

இந்த வீதிகளால் இரவு நேரங்களில் பயணிப்போர் பெரும் சிரமப்பட்டு வருகின்றனர். (4-17)

## அலுவலக நேரம் வரை தடுப்புக் காவலில்!

தென்மராட்சி,செப்.20

நீதிமன்றுக்குத் தாமதமாகி வந்த நபரை நீதிமன்ற அலுவலக நேரம் முடியும்வரை நீதிமன்றக் காவலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

இச்சம்பவம் கடந்த 14ஆம் திகதி சாவகச்சேரி நீதிமன்றில் இடம்பெற்றது.

வழக்குக்கு அழைக்கப்பட்டவேளையில் நீதிமன்றில் சமுகமளிக்காததால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. சிறிது நேரத்தில் அங்கு வருகைதந்த நபர் தனக்குப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டதை அறிந்து சட்டத்தரணி மூலம் நீதிமன்றில் மனுச்செய்தார்.

இந்நபரை நீதிமன்ற அலுவலக நேரம் வரை காவலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (4-117)

## 14 வருடங்களாகத் திருத்தப்படாத வடிகால்

யாழ்ப்பாணம்,செப்.20

பாஷையூர் புனித அந்தோனியார் மகளிர் ஆரம்பப் பாடசாலைக்கும் பாஷையூர், புதுக்குடியிருப்பு மக்கள் குடிமனைக்கும் இடையில் அமைந்துள்ள வடிகால் 14வருடங்களுக்கு மேலாக கவனிப்பாரற்ற நிலையில் காணப்படுகின்றது.

இதனால் கழிவு நீர் ஓரிடத்தில் தங்கி நிற்பதால் மலேரியா, டெங்கு, நெருப்புக் காய்ச்சல் போன்ற தொற்று நோய்கள் பாஷையூர் பகுதியில் ஏற்படும் அபாயநிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் எதிர்வரும் மழை காலங்களிற்கு முன்பாக விரைவாக இந்த வடிகாலினை துப்புரவு செய்து செப்பனிட்டுத் தருமாறு அப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர். (4-190)

## பருத்தித்துறைப் பிரதேச வீதிகளைப் புனரமைக்க நிதி

பருத்தித்துறை பிரதேசசபை எல்லைக்குட்பட்ட வீதிகளினை புனரமைப்பதற்கென 15 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பிரதேசச் சபையினால் ஒதுக்கப்பட்ட இந்த நிதியினைப் பயன்படுத்தி அப்பகுதிக்குட்பட்ட வீதிகளான ஆனைவிழுந்தான் புனிதநகர் வீதி, திக்கம்மணல் வீதி, மந்திகை அம்மன் கோவில் வீதி ஆகிய வீதிகளையும்-

மருதங்கேணிப் பகுதியில் உள்ள நாகப்பர் வீதி, ஆழியவளை பாடசாலை வதி ஆகிய வீதிகளினையும்திருத்துவதற்குத் திட்டமிடப் பட்டிருக்கின்றது. ஆழியவளை வீதியில் மாமுனை தொடக்கம் ஆழியவளை வரையிலான வதியினை புனரமைப்பதற்கான நடவடிக்கையினை கிளிநொச்சி மாவட்ட வீதி அபிவிருத்தித் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது. (4-118-203)

## யாழ்.தொழில் நுட்பக் கல்லூரிக்கு இன்று ஜப்பான் தூதரக அதிகாரி வருகின்றார்

தொழில் நுட்பக்கல்லூரிகளின் நிலைமைகள் குறித்து ஆராய்வதற்கு இன்று கொழும்புக்கு வருகை தரும் ஜப்பான் நாட்டின் பிரதிநிதி யாழ்.தொழில் நுட்பக்கல்லூரிக்கும் விஜயம் செய்யவுள்ளார்.

ஜப்பானின் தொழில் நுட்ப உதவி வழங்கும் தூதரகங்களின் முதுநிலை ஆலோசகரான சந்தரே தனக்குரே என்பவரே இவ்வாறு யாழ். வருகைதரவுள்ளார்.

இன்று காலை கொழும்பு வரும் இவர் யாழ். தொழில் நுட்பக் கல்லூரியின் நிலைவரம் தொடர்பாக நேரடியாகக் கேட்டறிய யாழ்ப்பாணம் வருகின்றார்.

யாழ்.வருகைதரும் அவரிடம் குடாநாட்டில் மேலும் மூன்று இடங்களில் தொழில் நுட்பக்கல்லூரிகளை நிறுவுவது தொடர்பாகவும் அதற்கான நிதியுதவியினை பெற்றுத்தருமாறும் கோரவுள்ளதாக யாழ். தொழில்நுட்பக் கல்லூரியின் அதிபர் ந.லோகராஜன் தெரிவித்தார். (எ-6)

## 'நிகொட்' திட்டப்பணிகள் நாவற்குழியில் ஆரம்பம்

தென்மராட்சி,செப்.20

'நிக்கொட்'நிறுவனத்தினரால் மீள்குடியேற்றக் கிராமங்களில் முனஆயத்த நடவடிக்கைகள் திட்டத்தின் கீழ் நாவற்குழி பள்ளம் கிராமத்தில் மேற்கொள்ளும் அபிவிருத்தித் திட்டங்களை யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் ஆகியோர் கடந்த 16ஆம் திகதி ஆரம்பித்து வைத்தனர்.

இப் பகுதியில் புனர்நிர்மாணிக்கப்படும் வீதி வேலையையும், அற்புதமாதா சனசமூக நிலையத்திற்கான அடிக்கல்லையும் நாட்டி வேலைகளை ஆரம்பித்து வைத்தனர்.

இந்த நிகழ்வில் யாழ்.செயலகத் திட்டமிடல் பணிப்பாளர் பு.சுந்தரம் பிள்ளை, தென்மராட்சி பிரதேசச் செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் சி.குணாளசிங்கம் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (4-117-75)

## கண்ணீர் அஞ்சலி



யாழ். மாவட்டக் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசத்தின் தலைவர் திரு.சி.குமரவேல் அவர்களின் அன்புத் துணைவியார்

### திருமதி திலகவதி குமரவேல்

(பொது முகாமையாளர், சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்) அவர்கள் திடீரென இயற்கையெய்திய செய்திகேட்டு அதிர்ச்சி அடைந்தோம். அவரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

காங்கேசன்துறை வீதி.
யாழ்ப்பாணம்.
(சி-37718)(24-11-45-43)

**பணிப்பாளர்களும் பணியாளர்களும் யாழ். மாவட்டக் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம்.**

## கண்ணீர் அஞ்சலி



### அமரர் எலியாஸ் ஜெயராஜா

(பிரபல கட்டட ஒப்பந்தகாரரும், சாமினி ஹாட் வெயர் உரிமையாளரும்)

அன்புடன் வாழ்ந்து பண்புடன் பழகி மறைந்து விட்டீர்!

ஆத்ம சாந்திக்காக ஆண்டவனை இறைஞ்சுகின்றோம்.

பிரிவால் வருந்தி நிற்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*186, இரண்டாம் குறுக்குதெரு,*
*யாழ்ப்பாணம்.* (36660)(39-11-45-43)

ச.ஜேசுதாசன் (சின்னமணி)
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



அமரர்

### க.வி.குலரத்தினம் J.P.

(உபதலைவர், இலங்கை செஞ்சிலுவைச்சங்கம் - யாழ்ப்பாண மாவட்டக்கிளை)

அன்னாரின் திடீர் மறைவினை அறிந்து அதிர்ச்சியடைந்தோம். இவ்வேளை அன்னார் செய்த சேவைகளை நினைவு கூர்வதோடு, துயருற்றிருக்கும் குடும்பத் தினருக்கு ஆறுதல் கூறுவதோடு, ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,*
*யாழ்ப்பாண மாவட்டக்கிளை,*
*73, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.* (36656)(39-11-45-43)

தலைவர், ஆளுநர்சபை
உறுப்பினர்கள்,
ஊழியர்கள்,
தொண்டர்கள்.

## சித்த மருத்துவ மாணவர்கள்
**B.S.M.S. பட்டதாரிகள், விரிவுரையாளர்களுக்கான**
### அவசரக் கலந்துரையாடல்

மேற்படி கலந்துரையாடல் துறைமண்டபம், கைதடியில் நடைபெற இருப்பதால் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

விடயம்: சித்த மருத்துவத்தின் இன்றைய நிலை பற்றி ஆராய்தல்

காலம்: 21.09.2004 (செவ்வாய்க்கிழமை) முற்பகல் 11.00 மணி

**சித்த மருத்துவ மாணவர் ஒன்றியம்,**
யாழ்.பல்கலைக்கழகம். (36657)(32-17-18)

## நன்றி நவிலல்



அன்னை மடியில் 02 - 07 - 1941
ஆண்டவன் அடியில் 16 - 09 - 2004

### ஐயன் பிள்ளையான்
**(ஓய்வூதியர்-மானிப்பாய் இந்துக் கல்லூரி)**

கடந்த 16.09.2004 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்ப ஒளி விளக்கின் மரணச் செய்தி அறிந்து நேரில் வந்து எமது துயரில் பங்குகொண்டோருக்கும், தொலைபேசி மூலம் அனுதாபச்செய்தி தெரிவித்தோருக்கும் இறுதி யாத்திரையில் கலந்துகொண்டோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அத்துடன், இன்று (20.09.2004) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திக் கிரியை நிகழ்வில் கலந்துகொள்ளுமாறும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*கலாசாலை வீதி, திருநெல்வேலி,*
*யாழ்ப்பாணம்.*
*தொ. பே. 077-6592803* (36674)(32-17-18)

மனைவி, பிள்ளைகள், உறவினர்கள்.

## கண்ணீர் குளமாகிய ஆண்டொன்றின் நிறைவு தினம்



உதிப்பு 22 - 10 - 1928
உதிர்வு 20 - 09 - 2003

### அமரர் பிலிப் இராசரத்தினம் அருள்நாயகம்
**(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்)**

"உயிர்ப்பும் உயிரும் நானே-என்னில்
விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"

அருள் நிறைந்த ஆசானே
அகிலம் போற்ற வாழ்ந்தீரே
வயவை ஊரில் வந்துதித்த செம்மலே
நீர் வாழ்ந்த நாளெல்லாம்
உம்மை வணங்கிப் பணிபுரிந்தோம்
பாரினில் இன்று பண்பாளரே!
உம்மைக் காணாமல் பரிதவிக்கின்றோம் நாம்!

*சு. தர்மகுலசிங்கம்,*
*55, சோமசுந்தரம் லேன்,*
*யாழ்ப்பாணம்.* (33669)(32-17-18)

*உம் பிரிவால் துயருறும்: குடும்பத்தினர்.*


**ராஜா** யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
அர்ஜுன், லாராதத், ரகுவரன், விவேக் நடித்த
அரசாட்சி
ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.
பு.நே. 10.30, 2.30, 6.30, 9.30



**நிறைஞ்சனாஸ்** சங்கானை



கமல், பிரபு, சினேகா நடித்த
வசூல்ராஜா MBBS (ரீகல்)
வெள்ளி, சனி, ஞாயிறு.
திரையில்: 11.00, 2.45, 6.00 பு.நே.
(C/36303)(12) Return to tow Moon Junction (இரவு 8.45 பு.நே.)

**நாகம்ஸ்** சுன்னாகம்

இன்று மட்டும்
தனுஷ், சிந்துதுலானி, கருணாஸ், மணிவண்ணன் நடிப்பில்
சுள்ளான் (திரை)
காட்சிநேரம்: 11.00, 3.00, 7.00 (புதியநேரம்)
(C-36415)(12)




## மரண அறிவித்தல்கள்



### கார்த்திகேசு முத்தையா
**(இளைப்பாறிய அதிபர்)**

கட்டைப்பிராயைப் பிறப்பிடமாகவும் கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு முத்தையா அவர்கள் நேற்று (19.09.2004) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் சிவபதமடைந்துள்ளார்.

அன்னார் கார்த்திகேசு - தங்கம் தம்பதிகளின் மகனும் செல்லம்மா (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் பாசமிகு கணவரும், நிர்மலானந்தன் (கனடா), நிர்மலவதனி (லண்டன்), நிர்மலபவானி (பட்டு), நிர்மலஆதித்தகுமார் (கனடா), நிர்மலச்சந்திரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவராணி, Dr.நல்லைநாதன், அம்பலவாணர், மிதிலா, குமுதா ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் அஞ்சலி நிகழ்வு இராச வீதி, கோப்பாய் தெற்கில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் இன்று (20.09.2004) திங்கட்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அம்பலவாணர் (குஞ்சு - மருமகன்).
T.P.5144212259

*இராச வீதி,*
*கோப்பாய் தெற்கு,*
*கோப்பாய்.* (36675)(35-13-18-32)

### திருமதி தர்மசிங்கம் பகவதி
**(சங்கீதபூஷணம்)**

இலக்கம் 46, ஜெயந்திநகர், கிளிநொச்சியைச் சேர்ந்த திருமதி தர்மசிங்கம் பகவதி அவர்கள் நேற்று (19.09.2004) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சங்கீதாவின் (கிளி.இந்துக் கல்லூரி, கலைப்பிரிவு மாணவி) அன்புத் தாயார் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.09.2004) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இல.24, ஆ.பகுதி தேவிபுரத்தில் உள்ள சகோதரரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தேவிபுரம் பொது மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பெறாமகன்.

*இல.24 ஆ.பகுதி,*
*தேவிபுரம்.* (C-37722)(32-35-13-18)

## வியத்தகு பார்த்தீபனே!



பார்தனில் வியத்தகு பார்த்தீபன்
திலீபனய்யா
நல்லைக் கந்தன் வீதியிலே
நாயகனே நீ கிடந்து
நாம் தமிழர் வாழ்வதற்காய்
சொட்டுச் சொட்டாய் உயிர் துறந்து
காந்திதேசத்திற்கு அகிம்சைப்
பாடம் புகட்டிய வீரனே!
நம் தேசம் பெருமை கொள்ளுதய்யா
உன்பெயர் சொல்லி உலகினிலே.

**ஐடியல் அக்கடமி**
*கணனிப் பயிற்சி நிலையம், காரைநகர்.*

(சி-37721) (18-13-32-33)

## விழிநீர் சொரிந்து அஞ்சலி



மலர்வு 23 - 01 - 1943
உதிர்வு 13 - 09 - 2004

அமரா
### எலியாஸ் ஜெயராஜா
**(பிரபல கட்டட ஒப்பந்தகாரர்)**

மனிதரில் பண்புமிக்க தெய்வமாய் பாரினிலே வாழ்ந்து
அயலவன் வளர்ச்சியில் இன்பமும் பெருமையும்
காணும் பெரியோனே! உங்கள் தன்னலமற்ற
சேவையுள்ளம் எப்போதும் எம் நெஞ்சில் உறைந்திருக்கும்
மற்றவர்களுக்கு உதவுவதில் இன்பங்கண்டவனே
எங்குற்றாய் ஏங்குகின்றோம் உனை நினைந்து!
உங்கள் ஆத்மா நித்திய சாந்திபெற எமது
ஆண்டவரை இறைஞ்சுகின்றோம்.

*இல. 68, பலாலி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (36641)(18-17-32)

எஸ்.ஆனந்தம் குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### சோமு இராசு



புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் தற்போது வண்-மேற்கு, பெரியதம்பிரான் கோயிலடியில் வசித்தவருமாகிய சோமு இராசு (முன்னாள் சண்முகா தியேட்டர் ஒப்பரேற்றர், கிளிநொச்சி) நேற்று (19.09.2004) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோமு-முத்தம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஜோன் பிள்ளை-செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் (மகாலட்சுமி) அன்புக் கணவரும் காலஞ்சென்ற சிவாகரன், பாஸ்கரன் (வசந்தன்-லண்டன்), காலஞ்சென்ற ஜீவாகரன் மற்றும் கிருபாகரன், லெட்சுமிகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் ஜனனி (லண்டன்), வாணிஸ்ரீ ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான சின்னராசா, நாகலிங்கம், மணியம், இந்திராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் கமலாதேவி, காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, இராசாத்தியம்மா, சண்முகநாதன் மற்றும் சுபத்திரை, காலஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் இராசம்மா திரேசம்மா ஆகியோரின் மைத்துனரும் விதுஷா, லக்ஷி, லக்ஷிகன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.09.2004) திங்கட்கிழமை மு.ப.10.30மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*12, பெரியதம்பிரான் கோயில் வீதி,*
*வண் - மேற்கு, யாழ்ப்பாணம்.*
*T.P.0214590367* (36673)(35-13-17-32)

தகவல்:
இராசு கிருபாகரன் (மகன்).

### விசுவலிங்கம் குலரத்தினம் (J.P.)

(உரிமையாளர்-லிங்கம் ஸ்ரோஸ், ஆஸ்பத்திரி வீதி, முன்னாள் தலைவர் - யாழ். வணிகர் கழகம், உப தலைவர்-செஞ்சிலுவைச சங்கம், யாழ்., உப தலைவர்-மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை)



காரைநகர், களபூமி, பாலாவோடையைப் பிறப்பிடமாகவும் பலாலி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட விசுவலிங்கம் குலரத்தினம் 17.09.2004 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் முன்னாள் கிராம சபைத் தலைவர் K.K. விசுவலிங்கம்-தெய்வானைப்பிள்ளை அவர்களின் அன்புப் புதல்வனும் A.R வேலுப்பிள்ளை - பொன்னம்மா ஆகியோரின் அன்பு மருமகனும் கனகம்மாவின் அன்புக் கணவரும் சிவசுப்பிரமணியம், புவனேஸ்வரி, பரமானந்தம் (மூதூர்-திருமலை மோட்டார் படகுச்சேவை), பஞ்சலிங்கம், கமலாம்பிகை (சௌந்தரம்), இராஜேஸ்வரி, திலகவதி, இந்திராணி, க.மு.தர்மராஜா (பிரசித்த நொத்தாரிசும், சட்டவியலாளரும்) க.மு.சிவபாலசுப்பிரமணியம் (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சதானந்தலிங்கம் (லண்டன்), சர் வானந்தலிங்கம் (ஜேர்மனி), பரராசலிங்கம் (லண்டன்), தேவநாயகி (லண்டன்), குலதேவி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் விக்னேஸ்வரன் (லண்டன்), சத்தியபாமா (லண்டன்), தவயோகேஸ் வரி (ஜேர்மனி), தவராசா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சாஜினி, சிவகுமார், மாலதி, திவியா, கனகா, ஐங்கரன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான குமாரசண்முகம், சிவக் கொழுந்து, A.R.V. சோமசுந்தரம், பாக்கியம் மற்றும் பொன்னம்பலம் செல்வராசா, சிவபாலநாதன், யோகராணி, சிவரூபராணி, பரமசிவம், தவமணி ஆகியோரின் மைத்துனருமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.09.2004) திங்கட்கிழமை காலை 7.30 மணிக்கு இல.532, பலாலி வீதி, திருநெல்வேலி "லிங்கம் வாசம்" இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் தில்லை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*இல.532, பலாலி வீதி,*
*திருநெல்வேலி.*
*யாழ்ப்பாணம்.* (36670)(32-13-17)

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள், K.K. விசுவலிங்கம் குடும்பம்.

## 31 ஆம் நாள் நினைவுக்கலசம்



மண் மகிழ 01 - 10 - 1933
கண் நெகிழ 21 - 08 - 2004

அமரர்
### கார்த்திகேசு சுப்பிரமணியம்
(துரை மதுபானச்சாலை உரிமையாளர், சாவகச்சேரி)

ஐயா! உம் அழகுமுகம் மறைந்து போச்சோ?
ஐயாறு நாளின்று அகன்று ஆச்சோ?
வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்தீர்-எம்மை
வளமாக வாழவைத்து வாட்டம் நீக்கி
கையணைத்துக் காத்தீரே! கலைகள் ஈந்து
கலங்கியழ வைத்தின்று கனவாய் ஆனீர்!
செய்யதிருப் பதம்பணிந்து என்றும் உங்கள்
திருநாமம் பதியவைப்போம் சாந்தி கொள்க!
*ஓம் சாந்தி, ஓம் சாந்தி, ஓம் சாந்தி.*

இன்று (20.09.2004) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் எம் இல்லத் தலைவரின் ஆத்மசாந்திக் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*கல்லூரி வீதி,*
*சங்கத்தானை, சாவகச்சேரி.* (36676) (32-13-18)

- குடும்பத்தினர்.

# இராணுவத்தின் மூத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்தின் மேஜர் ஜெனரல் தரத்திலும் (அதற்குச் சமமாக கடற்படையில் ரியர் அட்மிரல் மற்றும் விமானப்படையில் ஏயர் வைஸ் மார்ஷல் தரத்திலும்) உள்ளவர்களுக்கு மூன்றாவது பதவி நீடிப்பு எக்காரணம் கொண்டும் வழங்கப்படக்கூடாது என்று இக்குழு தனது இறுதி அறிக்கையில் சிபாரிசு செய்திருக்கின்றது.

ஓர் அதிகாரியின் சேவை தவிர்க்கமுடியாத நிலையில் கட்டாயம் தேவை என்ற சந்தர்ப்பத்தில் மட்டும் - அந்த அதிகாரியின் தரத்துக்குரிய பதவிக்காலம் முடிந்த பின்னர் -

பிரிகேடியர் தரத்துக்கு மேல் உள்ளவர்களுக்கு ஒரு தடவையும் -

மேஜர் ஜெனரல் தரத்திற்கு மேல் உள்ளவர்களுக்கு மேலும் ஒரு தடவையும் -

பதவி நீடிப்பு வழங்கப்படலாம்.

இதுவும் கூட தவிர்க்கமுடியாத ஒரு சில சந்தர்ப்பங்களில் மட்டும் வழங்கப்படலாம்.

இப்படி அக்குழு சிபாரிசு செய்திருக்கின்றது.

ஆறு பக்கங்களில் அக்குழு வழங்கியுள்ள அறிக்கையை ஜனாதிபதி அப்படியே ஏற்று அங்கீகரித்திருப்பதால் எதிர்காலத்தில் பதவி உயர்வுகள் வழங்கப்படும்போது அதனைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கவேண்டும் என்று முப்படைகளின் தளபதிகளுக்கும் தெரிவித்திருக்கின்றார் - ஜனாதிபதியின் செயலாளர் டபிள்யூ.ஜே.எஸ்.கருணாரட்ண.

இவ்வாறு உயர் அதிகாரிகளுக்கு மூன்றாவது சேவை நீடிப்பு வழங்குவதில்லை என்ற முடிவால் உடனடியாகப் பெரிதும் பாதிக்கப் படப்போவது இராணுவம்தான் என்று தெரிகின்றது.

இதன்படி அடுத்த ஆண்டு முற்பகுதியில் இராணுவத் தலைமையில் பல வெற்றிடங்கள் ஏற்படப்போகின்றன.

இராணுவத் தளபதிக்கு அடுத்து இரண்டாவது நிலையில் - இராணுவத்தின் சிரேஷ்ட அதிகாரியாக இருப்பவர் மேஜர் ஜெனரல் சூல செனவிரத்ன.

அவரது மூன்றாவது சேவை நீடிப்பு டிசெம்பரில் முடிகிறது. அப்போது 55வயதை அடைந்திருக்கும் அவர் இராணுவத்திலிருந்து ஓய்வு பெறவேண்டியவர் ஆகிறார்.

எனினும் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் இயக்குநராகவும் வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களில் இராணுவப் புலனாய்வு அதிகாரியாகவும் பணியாற்றியுள்ள அவர், இந்த ஓய்வுக்குப் பின்னர் வெளிநாட்டுப் புலனாய்வுப் பணியகத்தின் இயக்குநராகப் புதிய நியமனம் பெறுவதற்கு அதிக வாய்ப்பு உண்டு. இவருக்கு அடுத்து இராணுவத்தில் தற்போது மூன்றாவது நிலையில் - இராணுவத்தின் பிரதி சிரேஷ்ட அதிகாரி பதவியில் இருப்பவர் மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா. மேஜர் ஜெனரல் சூல செனவிரத்னவின் ஓய்வை அடுத்து டிசெம்பரில் இவர் இராணுவத்தின் சிரேஷ்ட அதிகாரியாக இரண்டாம் நிலைக்கு உயருவார்.

ஆனாலும் மூன்றாவது சேவை நீடிப்பில் இருக்கும் அவருக்கு அந்த நீடிப்பு அடுத்த ஏப்ரலில் முடிவடைகிறது. அதற்குப் பின்னும் அவர் சேவையில் இருப்பதாயின் ஜனாதிபதி குமாரதுங்க தற்போது தாம் விதித்திருக்கும் விதிமுறை ஏற்பாட்டை தளர்த்தவேண்டும்.

அப்படி இல்லாமல் அடுத்த தர நிலைப் பதவிக்கு உயர்வதன் மூலம் சேவையில் தொடர்ந்து சரத் பொன்சேகா இருக்கவேண்டுமானால் அடுத்த தரநிலையான இராணுவத் தளபதியாக அவர் பதவி உயர்வு பெறவேண்டும்.

ஆனால், அடுத்த ஏப்ரலில் இப்போதைய இராணுவத் தளபதி அப்பதவில் ஆக 9 மாதங்களையே பூர்த்தி செய்திருப்பார். அவரது முதலாவது பதவிக்காலம் கூட அப்போது முடிந்திருக்காது. ஆகவே அதற்குள் அப்பதவியையும் மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா பெறமுடியாது. எனவே கடும்போக்காளரான சரத் பொன்சேகாவை அடுத்த ஏப்ரலுக்குப் பின்னரும் இராணுவ சேவையில் ஜனாதிபதி வைத்திருக்க வேண்டுமானால் தாம் தற்போது விதித்துள்ள ஒழுங்குவிதிகளை அவரே மீறியாகவேண்டும்.

இராணுவத்தில் தற்போது நான்காவது நிலையில் இருப்பவர் மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால. இப்போது அவர் இராணுவத் தொண்டர் படையின் தளபதியாகக் கடமையாற்றுகின்றார். இந்தத் தரநிலையில் அவரது இரண்டாவது சேவை நீடிப்பு அடுத்த மார்ச்சில் முடிவடைகிறது. மூன்றாவது சேவை நீடிப்பு இல்லை என்ற விதிமுறை காரணமாக அடுத்த ஆண்டு ஒக்ரோபர் 20ஆம் திகதி 55வயதை அடையும் மேஜர் ஜெனரல் சந்திரபால, 55வயதை அடைய முன்னரே அடுத்த மார்ச்சில் இராணுவத்திலிருந்து வீட்டுக்குச் செல்வார்.

இதேபோன்றதுதான் இராணுவத்தில் தற்போது ஐந்தாவது நிலையில் இருக்கும் கிழக்குப் பிராந்தியத் தளபதியான மேஜர் ஜெனரல் நந்தா மல்லவராச்சியின் நிலைமையும். 2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் 3ஆம் திகதி 55வயதைப் பூர்த்தி செய்யும் இவர், அதற்கு முன்னர் அடுத்த ஆண்டு மார்ச்சில் தமது இரண்டாவது பதவி நீடிப்புக் காலம் பூர்த்தியாகும் போது இராணுவத்தில் இருந்து சேவை நிறைவு பெறும் நிலைமைக்குத் தள்ளப்படுவார்.

இராணுவத்தில் ஆறாவது வரிசையில் இருக்கும் மேஜர் ஜெனரல் சிசிர விஜேசூரிய இப்போது இராணுவப் பொது அதிகாரிகளின் பணிப்பாளர் நாயகமாகப் பணி புரிகின்றார். 55 வயதை எட்டியதன் காரணமாக அடுத்த பெப்ரவரியில் அவர் ஓய்வு பெறுவார்.

இராணுவத்தில் எட்டாவது தர நிலையில் இருக்கும் மேஜர் ஜெனரல் கே.பி.எகடவல தற்போது இராணுவச் செயலாளராகக் கடமையாற்றுகின்றார். அவரும் 55 வயதைப் பூர்த்திசெய்யும் நிலையில் அடுத்த மாதம் ஓய்வுபெறுகின்றார். ஜனாதிபதி தற்போது அங்கீகரித்துள்ள ஒழுங்குவிதிகளின்படி - இராணுவத் தளபதிக்கு அடுத்து தொடர்ந்தும் அடுத்த வருடத்தில் இராணுவத்தில் பதவியில் நீடிக்கப் போகின்ற அடுத்த வரிசை உயர் நிலை அதிகாரி மேஜர் ஜெனரல் பரமி குலதுங்க. இராணுவத்தில் தற்போது ஏழாவது நிலையில் உள்ள இவர் வன்னிப் பகுதித் தளபதியாகப் பணிபுரிந்து வருகின்றார். இப்படி இராணுவத்தின் முதல் எட்டு நிலைகளிலுள்ள அதிகாரிகளில் ஆறுபேர் அடுத்த வருட முற்பகுதிக்குள் ஒரேயடியாக வீட்டுக்குச் செல்ல இராணுவம் மிகப்பெரிய அனுபவசாலிகளின் வெற்றிடத்தை எதிர்கொள்ள வேண்டி நேரிடும் என்று இராணுவ விமர்சகர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ஐ-க)

# பிரதமரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லாடும் அவர், அரசமைப்பு மாற்றத்துக்கு ஆகக் குறைந்த தேவையான மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை நாடாளுமன்றத்தில் பெறுவது துர்லபம் என்பது தெளிவு.

இந்நிலையில் தமக்குப் பின்னர் தமது இடத்தில் தமது சகோதரரை அமர்த்துவதன் மூலம் ஆட்சியில் குடும்ப ஆதிக்கத்தை உறுதிப்படுத்தவும், ஆட்சியிலும் அரசிலும் தனது பிடியைத் தக்கவைத்துக் கொள்ளவும் அவர் திட்டமிடுகிறார் என்று கொழும்புத் தகவல்கள் கூறுகின்றன.

புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் தமக்கையார் சந்திரிகா குமாரதுங்கவின் சொற்படி கேட்டு அனுரா நடப்பார் என்று நேரடியாக உறுதியளித்த பின்னரே அவரை முன்னுக்குக் கொண்டுவரும் நடவடிக்கையை ஜனாதிபதி குமாரதுங்க ஆரம்பித்திருக்கின்றாராம்.

இதற்கு இடைஞ்சலாக - குறுக்கில் - இருக்கும் தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைத் திட்டம் போட்டு ஒதுக்கவும் ஜனாதிபதி குமாரதுங்க தயாராகிவிட்டாராம்..

தமது கட்சி மற்றும் தமது கூட்டமைப்பு ஆகியவற்றின் சார்பில் தமக்கு அடுத்த ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராக தமது சகோதரர் அனுரா பண்டாரநாயக்கவை நிறுத்துவதற்கு இடைஞ்சலாக இருப்பவர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ என்பது ஜனாதிபதி குமாரதுங்கவுக்கு நன்கு தெரியும். அதனால் அவரை கட்சிக்குள்ளும் அரசுக்குள்ளும் ஓரங்கட்டும் முயற்சியை தீவிரமாக ஆரம்பித்திருக்கின்றார் ஜனாதிபதி.

இலங்கைக்கு வந்த நோர்வே அனுசரணைக் குழுவின் பிரதிநிதியான எரிக் சொல்ஹெய்மை சந்திக்கவிடாமல் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதி குமாரதுங்க மறித்ததும் -

அதனால் காதும் காதும் வைத்தாற்போல- இரகசியமாக - எரிக் சொல்ஹெய்மை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சந்தித்ததும் -

பின்னர் இவ்விடயம் பெரும் சர்ச்சையாக உருவெடுத்ததை அடுத்து இருவரும் உத்தியோகபூர்வமாகச் சந்திக்க ஜனாதிபதி குமாரதுங்க அனுமதித்ததும் - தெரிந்தவையே.

மஹிந்த ராஜபக்ஷவை ஒதுக்கிவிட்டு அனுராவை முன்னிறுத்துவதோடு புதிய நாடாளுமன்றத் தேர்தல் ஒன்றுக்கும் ஜனாதிபதி திட்டமிடுகின்றார் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஜனாதிபதித் தேர்தலில் அனுரா பண்டாரநாயக்க வென்றதும் அவரை வைத்துக் கொண்டு நாடாளுமன்றத்தின் மூலம் அரசமைப்பை மாற்றி, நாடாளுமன்றத்துக்குப் பதில் சொல்லக்கூடிய பிரதமர் ஆட்சி முறையை ஏற்படுத்தவும் -

அந்தப் பிரதமர் பதவியைத் தாம் ஏற்றுக் கொள்வதன் மூலம் அதிகாரத்தில் தொடர்ந்து இருக்கவும் -

ஜனாதிபதி மனக்கோட்டை கட்டியிருக்கின்றார் என்கின்றன கொழும்புத் தகவல்கள்.

கொழும்பு 'விசும்பாய' கட்டடத்திலேயே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தற்போது தங்கியிருக்கின்றார்.

ஏப்ரல் 2 பொதுத் தேர்தலுக்குப் பின்னர் புதிய பிரதமர் பதவிக்கு லக்ஷ்மன் கதிர்காமரையே நிறுத்துவதற்கு ஜனாதிபதி குமாரதுங்க விரும்பினார். ஆனால், கட்சிக்குள் தனது செல்வாக்கைப் பயன்படுத்தி, மஹிந்த ராஜபக்ஷ முறுகியதால் வேறு வழியின்றி அப்பதவியை அவருக்கு வழங்கவேண்டியவரானார் ஜனாதிபதி.

எனினும், அது தற்காலிக நியமனம் என்றும் மூன்று மாதத்தில நிலைமை மறுபரிசீலனை செய்யப்படும் என்றும் அப்போது மஹிந்தவுக்குத் தெரிவிக்கப்பட்டிருந்ததாம்.

இதனால் பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான அலரிமாளிகைக்கு தனது இருப்பிடத்தை மாற்றவேண்டாம் என்றும் அவருக்கு வழிகாட்டுதல் விடுக்கப்பட்டிருந்ததாம். அதனால் விசும்பாயவில் அவர் தங்கியிருந்தார்.

இப்போது தனது சகோதரர் அனுரா பண்டாரநாயக்கவுக்கு உயிர் அச்சுறுத்தல் இருப்பதால் அவருக்கு விசும்பாய இருப்பிடத்தை வழங்கும்படி பிரதமருக்கு உத்தரவு பிறப்பித்திருக்கின்றார் ஜனாதிபதி. பிரதமரை இப்போதைக்கு அலரிமாளிகை இல்லத்தையே பயன்படுத்தும்படியும் ஜனாதிபதி கேட்டுள்ளாராம்.

பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் மறைவை அடுத்து பிரதமரான ரத்னசிறி விக்கிரமநாயக்க பின்னர் கட்சிக்குள் இரண்டாவது இடத்திலிருந்து ஒதுக்கப்பட்டது போல மஹிந்த ராஜபக்ஷவையும் ஓரங்கட்டும் வேலைகள் முழு அளவில் ஆரம்பித்துவிட்டன எனத் தெரிகிறது.

# புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்து பொலீஸ் ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளார்.

பொலீஸ் நிர்வாகத்தின் இயக்குநராகப் பதவி வகிக்கும் பிரதிப் பொலீஸ்மா அதிபர் காமினி ரந்தெனிய தற்போது அடுத்த தரத்தில் இருந்தபோதிலும் கூட அவரின் பெயரை ஜனாதிபதி சிபார்சு செய்யாததற்கு அரசியற் காரணங்கள் இருப்பதாக பொலீஸ் வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

தற்போதைய பொலீஸ்மா அதிபரின் பதவிக் காலம் இம்மாதத்துடன் முடிவடைகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-க)

# இரத்தினபுரியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேநேரம், களுத்துறை மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளம் வடிந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. .

பாலுந்துநுவர பிரதேச செயலகத்திற்கு வரும் பகுதி, வெள்ளத்தில் மூழ்கியிருந்தனீ. தற்போது நீர் வழிந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யப் பொறுப்பதிகாரி மறுப்புத் தெரிவித்த சமயம் ஏற்பட்ட வாய்த் தகராறையடுத்தே இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ரி-56 ரக துப்பாக்கி இக்கொலைக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. கொல்லப்பட்டவரின் தலையிலும் கழுத்திலும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்படுவதாக பொலீஸார் தெரிவிக்கின்றார்கள்.

இதேவேளை நேற்றுமுன்தினமிரவு பொரளையில் பாதாள உலக கோஷ்டிகளிடையே ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். (ஐ-9)

# ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாக நீக்கிக் கொள்ளவேண்டுமென்று கோரிக்கை விடுத்திருந்தது.

ஆளும் கட்சியின் ஒரே கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பியும், சுதந்திரக் கட்சியும் முன்னுக்குப்பின் முரணான செய்திகளை வெளியிட்டுள்ளமை, அக்கட்சிக்குள் எழுந்திருக்கும் உட்கட்சிக் குழப்பங்களையே வெளிப்படுத்துவதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர் என்று இணையத்தளம் ஒன்று தெரிவித்தது.

# சமாதானப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்த காலப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளால் இடைக்கால நிர்வாகம் தொடர்பான யோசனைகள் முன்வைக்கப்பட்டன. அந்த யோசனை அடிப்படையில் அன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பேச்சுக்களை முன்னெடுப்பதற்கு தயாராக இருந்தார்.

அதேசமயம், இடைக்கால நிர்வாக யோசனையின் அடிப்படையில் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பதாக தெரிவித்தே சந்திரிகா தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியைக் கைப்பற்றியது.

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான சமாதான நடவடிக்கைக்கு தொடர்ந்தும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கூட்டுக்கட்சியான ஜே.வி.பி., எதிர்ப்புத் தெரிவித்துவந்தது.

இக்கட்சியுடன் கூட்டுச்சேர்ந்த சந்திரிகா தனது ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்வதற்காக நேரத்துக்குநேரம் மாறிமாறி கருத்துக்களை வெளியிட்டு வருகிறார்.

நிரந்தர அரசியல் தீர்விற்கான ஆரம்பகட்ட அரசியல் செயற்பாட்டிற்காகவே தமிழீழ விடுதலைப் புலிகளால் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனை முன்வைக்கப்பட்டது.

அந்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை வழங்க சந்திரிகா அரசு தற்போது இழுத்தடிப்புச் செய்வதற்காக பல்வேறு முரணான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றது என்றும் அந்தச் செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்கள்

### சோதிநாயகம் சண்முகம்

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், முகமாலை சட்டம்பியார் தோட்டத்தை வதிவிடமாகவும் தற்போது கச்சாய் வடக்கு கொடிகாமத்தில் வசித்து வந்தவருமான சோதிநாயகம் சண்முகம் அவர்கள் நேற்று (19.09.2004) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் இராசம்மாவின் சகோதரரும் அன்னமுத்துவின் சிறிய தகப்பனும் இராணியின் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.09.2004) திங்கட்கிழமை அன்னாரின் தற்போதைய இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக 12.00 மணியளவில் வெள்ளாம்போக்கட்டி கொப்புலவு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கச்சாய் வடக்கு,*
*கொடிகாமம்.* (சி-37723)(13-17-33)

தகவல்:
க.இராமநாதன்
(பாஸ்கரன்-மருமகன்)

### கந்தசாமி தவமணி



காரைநகர், அல்வின் வீதியைப் பிறப்பிடமாகவும் சங்கரத்தையைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட கந்தசாமி தவமணி நேற்று (19.09.2004) ஞாயிற்றுக்கிழமையன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா-வள்ளியம்மை (பரியாரி மூத்ததம்பி) தம்பதிகளின் அருமை மகளாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.09.2004) செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் வட்டுக்கோட்டை இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காரைநகர் சாம்பலோடை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பங்குரு லேன்,*
*வட்டு. தென்மேற்கு,*
*வட்டுக்கோட்டை.* (36677)(13-17-33)

தகவல்:
சி.கந்தசாமி (கணவர்),
பிள்ளைகள், மருமக்கள்.


LOGIC
பகுதி - I
by.: S.R.J. சுதன்
Paper Class
ஆரம்பம்:
22.09.2004 புதன்
DAY - 3.30
2005 - 4.30
நாவலர்
யாழ்நகர்.


வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு
புனரமைப்பு நிறுவனம் விடுக்கும்

**மணல் விநியோகம் பற்றிய அறிவித்தல்**

வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தான மஹோற்சவத்தை முன்னிட்டு, 20ஆம், 21ஆம், 22ஆம் ஆகிய திகதிகளில் மணல் விநியோகம் நடைபெறமாட்டாது. பின்பு 23ஆம், 24ஆம் திகதிகளில் குறிப்பிட்டவர்களுக்கு மட்டும் விநியோகம் நடைபெறும்.

அதன் பின்பு 27ஆம், 28ஆம், 29ஆம் திகதிகளில் விநியோகம் நிறுத்தப்பட்டு மீண்டும் 30ஆம் திகதி விநியோகம் வழமைபோல ஆரம்பமாகும்.

வ.கி.பு.பு. நிறுவனம். (சி-37716) (13-17-33) - **நிர்வாகம்.**


தேவை
ஸ்ருடியோ அனுபவம்
வாய்ந்த ஒருவர்
வேலைக்குத் தேவை.

தொடர்புகளுக்கு: -
குகன் ஸ்ருடியோ
பருத்தித்துறை. (36599)



பிறைற்றின் கல்வி நிலையம்
வணிகக் கல்வி
A/L Day Class - 2005
★ கடந்தகால வினாக்கள் ★ மாதிரி வினாக்கள்
BY. திரு.S.யசோ
ஆரம்பம்: 22.09.2004 Wed. 4p.m. (Slt)
(36639)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.09.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.